விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சிங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 27 செவ்வாய்க்கிழமை (11.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 204

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர

# அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்

## இன்றைய மாநாட்டில் தீர்மானம்!

(கொழும்பு)

**இரண்டு தசாப்த கால சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அரசியலமைப்பு சீர்த்திருத்தங்களை செய்யப் போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

**அரசியல் திருத்தங்களை ஆய்வுசெய்வதற்கான முதலாவது மாநாடு இன்று நடைபெறவுள்ளது.**

உள்நாட்டுப் போரை தீர்த்து வைப்பதற் கான முக்கிய ஒரு அணுகு முறையாக இந்த அரசமைப்பு சீர்திருத்தங்கள் அமையும்.

இதனை நிறைவேற்றுவதற்கு ஒரு காலக் கெடு இல்லை. ஆனால் விரைவில் இதனை நிறைவேற்ற வேண்டும் என்கிறார் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித ஹோகன்ன.

இன்று நடைபெறும் கூட்டமானது தென் னிலங்கைச் சிங்களவர், முஸ்லிம்கள், விடுத லைபுலிகளுக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## மிலிந்த மொறகொட அரசுடன்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மிலிந்த மொறகொட நவீன் திஸநாயக்க உள்ளிட்டோர் மகிந்தவின் அர சாங்கத்தில் விரைவில் இணையவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து தாவு வோரை அமைச்சரவையில் இணைத்துக் கொள்வதற்கு ஏதுவாக அமைச்சரவையை மாற்றம் செய்ய மகிந்த முடிவு செய்துள்ளார்.

கபினட் அல்லாத அமைச்சுப் பொறுப்புக் களை நீக்கவும் மகிந்த தீர்மானித்துள்ளார். மொத்தம் 7 ஐக்கிய தேசியக்கட்சியினர் மகிந்த அரசாங்கப்பக்கம் தாவவுள்ளனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் தலைவரான கொல்லப்பட்ட காமினி திஸ்ஸ நாயக்காவின் மகனான நவீன் திஸநாயக்க வுக்கு மகாவலி அபிவிருத்தி அல்லது வெளி விவகார பிரதி (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

கணனிக் கல்விப் பகுதி

## இரு தமிழ் இளைஞர்கள் மன்னாரில் சுட்டுக்கொலை

(மன்னார்)

மன்னாரில் இராணுவத்தினரால் இரு வேறு சம்பவங்களில் தமிழ் இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நானாட்டான் பிரதேச சபை அலுவலகக் கட்டடத்துக்குச் எதிர்புறம் உள்ள நெல்வயல் ஒன்றில் ஓர் இளைஞரின் சடலமும் நானாட் டானில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ரசூல் புதுவெளி பகுதியில் மற்றொரு சடலமும் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

நானாட்டான் சூரியகட்டைக்காட்டுப் பகுதி யில் நேற்றுக் காலை 8மணியளவில் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத் தினர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். அந்நபர் கிளைமோர் பொருத்திக் கொண்டி ருந்தபோது சுட்டதாக இராணுவத்தினர் தெரி வித்தனர்.

இதனையடுத்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புளொட் உறுப்பினர் யாழ்.நகரில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் கடமையிலிருந்தவர் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8 மணிக்கு அவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தலையில் படுகாயமடைந்த அவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் அங்கு உயிரிழந்தார்.

முன்னாள் புளொட் உறுப்பினரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான எஸ். கிறிஸ்தோப்பர் (வயது 48) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் குருநகரில் தனது குடும்பத்தினருடன் வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-132)

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஐ.தே.க.இனிக்கலந்து கொள்ளாது

(கொழும்பு)

ஜனாதிபதி தலைமையில் இனப்பிரச்சி னை தொடர்பாக இன்று கூட்டவுள்ள அனைத் துக்கட்சிக்கூட்டத்தினை பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கியதேசியக்கட்சி பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளது.

அனைத்துகட்சி குழுக்கூட்டமும் அதற்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் அமைக்கப் பட்டுள்ள 12 துறைசார் உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனை சபைக்கூட்டமும் முதல் முதலாக இன்று அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவ தில்லை என ஐக்கியதேசியக்கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த முடிவு தொடர்பாக இக் கட்சியின் மூத்த உறுப்பினரான ரவி கருணாநாயக்க பி.பி.சி.தமிழோசைக்கு அளித்தபோட்டி வரு மாறு;

அரசிற்கு இனப்பிரச்சினை தீர்வுகுறித்து தெளிவான கொள்கையோ திட்டமோகிடை யாது. இதன் பின்னணியிலேயே அனைத் துக்கட்சி மாநாடு ,அனைத்துக்கட்சிக்குழுக் கூட்டம், ஆலோசனைக்குழுக்கூட்டம் எனப் பல்வேறு பெயர்களில் கூட்டங்களை நடத்தி அரசியல் நாடகம் புரிந்து வருகின்றனர் என ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங் களில் அரசியல் செய்வதற்கு ஐக்கியதேசி யக்கட்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மருத்துவமனை நேற்று கோலாகலமாகத் திறந்து வைப்பு

கிளிநொச்சி பொதுமருத்துவமனை நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சேவைகள் பணிப்பா ளர் நந்தகுமாரன் தலைமையில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு பொதுமருத்துவ மனைத் திறப்புவிழா நடைபெற்றது.

இந் நிகழ்வின் தொடக்கத்தில் தமிழ் இன் னிசைக்குழு அணிவகுப்புடன் மருத்துவ மனை கட்டட முன்றலுக்கு அதிதிகள் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளரும் இரண்டு மாவீரர்களின் தாயாருமான பகவதி நாகேந்திரம் ஏற்றினார்.

தமிழீழ தேசியக்கொடியினை வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஏற்றி னார். மருத்துவமனை கட்டடத்தை தமிழீழ அரசியல்துறை துணை பொறுப்பாளர் சோ. தங்கன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

மருத்துவமனையின் பிரிவு அறைகளை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் , மூத்த மருத்துவர் கங்காதரன்,மருத்துவர் சிவபாலன் ,தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், மா.க.ஈழவேந்தன்,மருத்துவர் சிவகரன் , மருத்துவர் ஞானகுணாளன் ,வடக்கு -கிழக்கு மாகாண சுகாதார திட்டமிடல் ஆலோசகர் நச்சினார்க்கினியர் ஆகியோர் நாடாக்களை வெட்டித்திறந்து வைத்தனர். இரத்தினேஸ் வரக்குருக்கள் அருட்திரு எட்மண்ட் றெஜி னோல்ட் ,மருத்துவர் சிதம்பர நாதன் ஆகி யோர் ஆசியுரைகளை நிகழ்த் தினர். (ச-5)

## இ.போ.ச-சிற்றூர்திச் சாரதிகள் குறிகட்டுவானில் கைகலப்பு!

(யாழ்ப்பாணம்)

குறிகட்டுவானில் போக்குவரத்துச் சபையின் பணியாளர்களுக்கும் தனியார் சிற்றூர் திச் சாரதிகளுக்குமிடையில் நேற்று கைகலப்பு இடம் பெற்றது.

கைகலப்பில் இருவர் படுகாயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.நேற்றுக் காலை நயினாதீவிலிருந்து குறிகட்டுவானுக்கு வந்த பக்தர்களை ஏற்றுவதில் ஏற்பட்ட போட்டியே இக் கைகலப்பிற்குக் காரணம் என தெரி விக்கப்பட்டது.

இக் கைகலப்பினால் அங்கிருந்த பக்தர்கள் பதறியடித்தவாறு ஓட்டமெடுத்தனர். இத னால் அவர்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கினர்.

இதேவேளை கைகலப்பின்போது கல்லினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலை யில் இ.போ.சவின் சாலைப்பரிசோதகர் எஸ்.சிவனேஸ்வரன் (வயது 54) மற்றும் நடத்துநர் எஸ்.கஜேஸ்வரன் (வயது 25) ஆகிய இருவரும் யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறி விக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்குச் விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் தனியார் சிற்றூர்திச் சேவைகள் அனைத்தையும் இடைநிறுத்தினர்.

எனினும் பக்தர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டதால் மாலை 4.30 மணிக்குபின் அச் சேவையை மேற்கொள்ள அனுமதித்தனர். (ச-132,133)




# விடைபெற்றது ஜேர்மனி; வரவேற்கின்றது தென்னாபிரிக்கா

2006 ஆம் ஆண்டு 18-வது உலகக் கோப்பை உதை பந்தாட்ட தொடர் ஜேர்மனியில் கோலாகலமாக நடைபெற்றுள்ளது. இனி அடுத்த 19-வது உலகக் கோப்பைத் தொடர் 2010இல்தான். தொடர் ஆரம்பிக்கும் போதே சாதனையுடன் ஆரம்பமாகவுள்ளது.

கறுப்புக் கண்டமான ஆபிரிக்காவில் முதன்முறையாக உலகக் கோப்பைத் தொடர் நடக்கின்றது. இந்த சிறப்பு மிக்க தொடரை நடத்தும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றது தென்னாபிக்கா.

2010 இல் உலகக் கோப்பைத் தொடர் நடத்தும் வாய்ப்பைப் பெற பல நாடுகளும் போட்டியிட்டன. ஐ.நா. தலைமைச் செயலாளர் கொபி அனானின் தீவிர முயற்சியின் மூலம் தென்னாபிரிக்கா இந்த மகத்தான வாய்ப்பை கைப்பற்றியுள்ளது.

இத் தொடரின் இலட்சினையும் (லோகோ) தற்போது தயாராகிவிட்டது. பேர்லின் நகரில் ஜேர்மனி உலகக் கோப்பைத் தொடருக்கு நன்றி கூறி விடை பெற்ற உதைபந்தாட்ட சர்வதேச கூட்டமைப்பு (பிபா) 2010 உலகக் கோப்பை நடத்



தும் தென்னாபிரிக்காவின் இலட்சிணையையும் (லோகோ) அறிமுகப்படுத்தியது.

இதற்கான விழாவில் கொபி அனானிடம் உலகக் கோப்பையைவழங்கி கௌரவித்தார் பிபா தலைவர் பிளாட்டர். உலகக் கோப்பைத் தொடரை நடத்துவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதற்கேற்ற தரமான மைதானங்கள், உச்சக்கட்டப் பாதுகாப்பு, வீரர்கள் ரசிகர்கள் தங்குவதற்கான உயர் தொழில் நுட்ப வசதிகள் அடங்கிய ஹோட்டல்கள் இப்படி பல வசதிகள் தேவைப்படும்.

இதனால் வளர்ந்த நாடுகளால் மட்டுமே இத் தொடரை சிறப்பாக நடத்தமுடியும் என்ற நிலைமை இருந்துவருகின்றது. இதை மாற்றிக் காட்டுவதாக தென்னாபிரிக்க அரசு கூறியுள்ளது.

உலகஅளவில் இலங்கையைப்போல தென்னாபிரிக்காவும் வளர்ந்துவரும் நாடு. இதுவும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுதான். அப்படியிருக்க தென்னாபிரிக்காவில் உலகக் கோப்பையை சிறப்பாக நடத்த முடியுமா என்ற கேள்வி எழுந்தது.

இதற்கு பேர்லினில் விளக்கமளித்தார் தென்னாபிரிக்கப் பிரதமர் தபோ எம்பிகி. இவர் கூறுகையில்;

எங்களால் ஜேர்மனியைப் போல் உலகக் கோப்பைத் தொடரை சிறப்பாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அதற்கு நாங்கள் தயாராகவிருக்கின்றோம்.

பணம் எங்களுக்கு ஒரு பிரச்சினையல்ல. இதுகுறித்து பிபாவிடம் தெளிவான அறிக்கையை அளித்துள்ளோம். இத் தொடரில் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் காட்டுவோம் என்றார்.

இவர் கூறுவது நிஜம்தான். உலகக் கோப்பைத் தொடருக்காக நாட்டை நவீனப்படுத்த ஆரம்பித்துள்ளது தென்னாபிரிக்கா. மைதானங்களைப் புதுப்பிக்கவும் புதிய மைதானங்கள் அமைப்பதற்கும் ரூ.8ஆயிரத்து 500 கோடியை (இலங்கைப் பெறுமதி தென்னாபிரிக்க அரசு ஒதுக்கியுள்ளது.

தவிர விமானத்தளங்களையும் ஹோட்டல்களையும் பொதுமக்களுக்கான போக்குவரத்து அம்சங்களையும் நவீனப்படுத்துவதற்காக 12 ஆயிரத்து 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் உலகக் கோப்பை தொடர் வளர்ச்சிப்படிக்காக ரூ.5லட்சத்து 65 ஆயிரம் கோடியை திர்ணயித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தொடரை சிறப்பாக நடத்துவதன் மூலம் உலக அளவில் தென்னாபிரிக்காவின் அந்தஸ்து உயர்ந்து விடும். இது மட்டுமல்ல இத் தொடரின் மூலம் தென்னாபிரிக்காவின் பொருளாதாரமும் பெருமளவு உயரும்.

அமிர்தன்

# இத்தாலி அணிக்கு ரூ.140கோடி பரிசு



உலகக் கோப்பை உதை பந்தாட்ட இறுதி ஆட்டம் ஜேர்மனி தலைநகர் பேர்லினில் நேற்று முன்தினம் இரவு நடந்தது. இதில் இத்தாலி -பிரான்ஸ் அணிகள் மோதின. ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு இருந்தன.

இதனால் கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. இருந்தும் மேலும் கோல் எதுவும் விழவில்லை. இதனால் பெனால்டி ஷூட் முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் இத்தாலி 5-3 என்ற கோல் கணக்கில் வென்று உலக கோப்பையைக் கைப்பற்றியது. அந்த அணி 4-வது முறையாக உலக கோப்பையை வென்று உள்ளது. இதற்கு முன்பு 1934,1938,1982 ஆண்டுகளில் கோப்பையை வென்றிருந்தது.


உலகக் கோப்பையை அதிகமாக கைப்பற்றிய நாடு பிரேஸில் ஆகும். அந்த அணி 5 முறை கோப்பை வென்றுள்ளது. அதற்கு அடுத்தபடியாக இத்தாலி உள்ளது. ஜெர்மனி 3 முறையும் ஆர்ஜென்டீனா , உருகுவே, தலா 2 முறையும் பிரான்ஸ், இங்கிலாந்து தலா ஒரு முறையும் கோப்பையை கைப்பற்றியது.

உலகக் கோப்பை வென்ற இத்தாலி அணிக்கு இலங்கை ரூபா பெறுமதியில் ரூ.140 கோடி பரிசு தொகையாக வழங்கப்பட்டது. 2-வது முறையாக கோப்பையைக் கைப்பற்ற முடியாமல் பிரான்ஸ் ஏமாற்றம் அடைந்தது. அந்த அணிக்கு ரூ. 130 கோடி பரிசாக வழங்கப்பட்டது. 3-வது இடத்தைப் பிடித்த ஜேர்மனிக்கு ரூ.120 கோடி பரிசாக வழங்கப்பட்டது.

# ஜிடேனின் ஆத்திரம் ரசிகர்கள் வெறுப்பு

உலகின் முன்னணி உதை பந்தாட்ட வீரர்களில் ஒருவர் ஜிடேன். 1998 ஆம் ஆண்டு பிரான்ஸ் உலக கோப்பையைவெல்ல காரணமாக இருந்தார். பிரேஸிலுக்கு எதிரான இறுதிப் போட்டியில் தலையால் முட்டி இரண்டு கோல்கள் அடித்தார்.

இந்த உலகக் கோப்பையில் பிரான்ஸ் இறுதிப் போட்டி வரை நுழைவதற்குக் காரணமாக இருந்தவர். ஸ்பெயினுக்கு எதிரான 2-வது சுற்று, பிரேஸிலுக்கு எதிரான காலிறுதி, போர்த்துக்கலுக்கு எதிரான அரை இறுதியில் அற்புதமாக ஆடினார்.



நேற்று முன்தினம் இறுதிப் போட்டியிலும் அவரது ஆட்டம் நன்றாகவே இருந்தது. 7-வது நிமிடத்தில் பிரான்ஸுக்குக் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஜிடேன் கோல் அடித்தார்.

கூடுதல் நேரத்தில் அவரது ஆட்டத்தில் முரட்டுத்தனம் ஏற்பட்டது. தேவையில்லாமல் இத்தாலி பின்கள வீரர் மெட்ராஸியுடன் வாக்குவாதம் செய்தார்.

இந்த வாக்குவாதத்தின் போது ஜிடேன் தன்னையே மெய் மறந்தார். ஆத்திரத்தில் பந்தைத் தலையால் முட்டுவது போன்று மெட்ராஸியின் நெஞ்சில் முட்டினார். இதில் நிலை மாறி அவர் கீழே விழுந்தார்.ஜிடேனின் இந்த முரட்டுத்தனம் அனைவரையும் வெறுப்படைய வைத்தது. நடுவர் மிக சரியான முடிவை எடுத்து சிவப்பு அட்டை காண்பித்து அவரை வெளியேற்றினார்.

ஹீரோவாக தெரிந்த ஜிடேன் கடைசி நிமிடங்களில் வில்லனாகமாறி விட்டார். மூன்று முறை உலகின் சிறந்த உதை பந்தாட்ட வீரர் விருதைப் பெற்ற அவர் இப்படி செய்வார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. இதனால் தான் பெற்ற புகழை இழந்து அவமானத்திற்கு ஆளாகி விட்டார்.

இந்த உலகக் கோப்பையுடன் ஓய்வு பெறுவதாக ஜிடேன் ஏற்கனவே அறிவித்திருந் தார். ஓய்வு பெறும் நேரத்தில் அவரது இந்தச் செய்கை ரசிகர்கள் மத்தியில் வெறுப்படையச் செய்து விட்டது.

உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் அடித்த கோலோடு அவர் மூன்று கோல்கள் அடித்துள்ளார். இதன் மூலம் ஜெப் ஹர்ஸ்ட் சாதனையை அவர் சமன் செய்தார்.

# தங்கக் காலணி ஜேர்மனியின் குலுஸிற்கு

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் அதிக கோல்கள் அடிப்பவர்களுக்கு தங்கு ஷூ (காலணி) வழங்கப்படும். இந்தப் போட்டியின் தொடக்கத்திலிருந்தே ஜேர்மனி வீரர் குலுஸ் கோல் அடிப்பதில் முன்னணியிலிருந்தார். அரை இறுதிவரை அவர் 5 கோல்கள் அடித்தார். ஆனால் துரதிஷ்ட வசமாக ஜேர்மனி இறுதிப் போட் டிக்கு தகுதி பெறவில்லை.



குலுஸைத்தாண்டிமற்ற வீரர்கள் யாரும் கோல் அடிக்க வில்லை. 5 கோல்கள் அடித்ததே தனிப்பட்ட வீரரின் அதிகபட்ச கோலாகும். இதனால் 5 கோல்கள் அடித்த குலுஸிற்கு தங்கக் காலணி வழங்கப்பட்டது.

உலகக் கோப்பையில் தனிப்பட்ட வீரர் 5 கோல் அடிப்பது மிகக் குறைவாகும். 1962 ஆம் ஆண்டுக்கு பிறகு இப்படி குறைவான கோலை தனிப்பட்ட வீரர் அடித்துள்ளார்.

குலுஸ் கோஸ்டாரிகா ,ஈக்வாடர் அணிகளுக்கு எதிராக 2 கோல்களும் ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக ஒரு கோலும் அடித்தார். இந்த உலகக் கோப்பையில் 8 வீரர்கள் தலா 3 கோல்கள் அடித்திருந்தனர்.

# பெரும்பாலான தமிழ் மக்கள் புலிகளின் செயற்பாடுகளை ஆதரிக்கின்றனர்!

## பிரபல ஊடகவியலாளர் குவைன் டையர்

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தொடர்பாக குவைன்டையர்எழுதியுள்ள செய்தி ஒன்றில் பெரும்பாலான தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அவசியமானவை என்றே கருதுவதாக குவைன் டையர்மேலும் தெரிவித்துள்ளார்.

குவைன் டையர் என்ற செய்தியாளர் லண்டனை தளமாகக் கொண்ட கனேடியர். அவரின் கட்டுரைகள் 43 நாடுகளில் பிரசுரமாகியுள் ளன.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவை இன்று உலகம் மதிக்கின்றது.

எனினும் அவரால் 43 வருடங்களுக்கு முன்னாள் பண்ணை ஒன்றின் பகுதியில் ஒழித்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கைத்துப்பாக்கி ஒன்றை தற்சமயம் தென்னாபிரிக்க காவல்துறை தேடிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நெல்சன் மண்டேலாவினால் பழைய தீவிரவாதி என்ற பூச்சில் இருந்து தப்பமுடியாது எனசெய்தியைஎழுதிய குவைன் டையர் குறிப்பிட்டுள்ளார்.

நெல்சன் மண்டேலா எத்தியோப்பியாவில் இராணுவ பயிற்சிகளைப் பெற்ற பின்னர் அவருக்கு சோவியத் தயாரிப்பிலான மெக்காறொவ் கைத்துப்பாக்கி வழங்கப்பட்டது.

அவர் அதனை ஜொகா னஸ்பேக் பண்ணை பகுதியில் ஒழித்து வைத்து ஒரு வார காலப் பகுதியில் தென்னாபிரிக்க காவல்துறை கைது செய்தது. இந்த நிலையில் அவர் ஒரு கொலையை கூட செய்யாத நிலையில் 27 வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டார்.

அவர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடாத போதும் அவரால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பே உம்கென தோ விசிவாஸ் என்ற ஆயுத அமைப்பாகும். அந்த அமைப்பு தீவிரவாத நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்தது.

இது எழுச்சி ஒன்றுக்கான பாதையில் தீவிரவாதத்தை தவிர்க்க முடியாது என்ற நிலையை எடுத்துக் காட்டுவதாக குவைன் டையர் உறுதிப் படுத்தியுள்ளார்.

தமது போராட்டங்களில் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாகவே கென்யாவின் ஜொமோ கென்யாடா, சைபிரஸின் றொபேட் முகாபே போன்றவர்கள் தமது இலக்குகளை அடைந்ததாக குவைன் டையர் தமது செய் தியில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக்கொலை

திகாடுமல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான அன்வர் இஸ்மாயிலின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

எம்.ஐ.நிசார் (வயது-31) என்ற மெய்ப்பாதுகாவலரே கொல்லப்பட்டவர் ஆவார்.

சம்மாந்துறை மருத்துவமனை வீதியில் வசித்துவரும் இவர் கூட்டம் ஒன்றில் பங்கேற்றுவிட்டு அவரின் வீட்டுக்கு மோட்டார்சைக்கிளில் வரும் வேளையில் வீட்டுக்கு அருகில் மறைந்து நின்றதாகக் கூறப்படும் அடையாளம் தெரியாத நபர்கள் அவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த ஐந்து வருட காலமாக அமைச்சருடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் உடல் சம்மாந்துறை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக சிறிலங்கா காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பொலிஸ்-இராணுவம் கூட்டுப் பரிசோதனை

கொக்குவில் , ஆனைக்கோட்டை ஆகிய இரு பிரதேசங்களிலும் நேற்று முன்தினம் காலை சகல வீடுகளும் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 8மணியளவில் இப்பிரதேசங்களில் குவிக்கப்பட்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து ஒவ்வொரு வீடாகச் சென்று குடும்ப அட்டைகளைப் பரிசோதித்ததுடன் வீடுகளில் உள்ள ஒரு பொருளைக் கூட விடாமல் அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து பரிசோதனைக்குட்படுத்தினர்.

இப் பரிசோதனை வேட்டை நண்பகல் 1 மணிவரை நீடித்தது. இந்தப் பரிசோதனையால் பொதுமக்களுக்கு எவ்விதமான அசௌகரியமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (து-132)

# இராசிபலன்

**11.07.2006**
**(ஆனி 26, செவ்வாய்க்கிழமை)**
**சதுர்த்தசி முற்பகல் 10.49 மணிவரை**
**மூலம் பிற்பகல் 1.50 மணிவரை**
**இராகுகாலம் 7.28-8.58மணிவரை**
**சுபநேரம் 11.58-1.28 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | சரீரப்பிரயாசை, புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, உறவினர் சந்திப்பு. |
| இடபம் | எதர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், வாகனபயம், போசனசுகம். |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், தெய்வசிந்தை, செல்வாக்கு, குடும்பசுகம். |
| கடகம் | நல்ல செய்தி, காரிய சித்தி, சுபநிகழ்வு, விருந்துபசாரம். |
| சிங்கம் | முயற்சிதாமதம், வியாபார சிந்தை, பூர்வ புண்ணியம், பணக்குறைவு. |
| கன்னி | போசனசுகம், சுபசெலவு, நண்பர்கள் சந்திப்பு, நல்லமுயற்சி. |
| துலாம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, உறவினர் உதவி, சயனசுகம். |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், குடும்பக்கவலை, பொருள்விரயம், உடல்நலக்குறைவு. |
| தனுசு | நல்ல முயற்சி, போசனசுகம், உறவினர் சந்திப்பு, தேகநலன். |
| மகரம் | சுபசெலவு, வேலைச்சுமை, காரிய அலைச்சல், விருந்துபசாரம். |
| கும்பம் | தெய்வசிந்தை, பெரியோர் உதவி, போசன நன்மை. |
| மீனம் | முயற்சி கைகூடும், நல்ல செய்தி, நண்பர்கள சந்திப்பு , உடல்நலம். |

- வளவன்

# இந்தியா செல்ல முயன்ற 6பேர் கடற்படையினரால் கைது

(கொழும்பு)

இந்தியாவிற்கு சட்டவிரோதமாக செல்ல முயன்ற 6 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் செல்வதற்கான ஆயத்த நிலையில் வந்தபோது கடற்படையினரின் வீதிச்சோதனை சாவடியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

குறித்த 6பேரும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-9)

# கடலோரப் பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தம்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் கடற்படையினர் இரவு வேளைகளில் கடலோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பருத்தியடைப்பு முகாம் வீதி கரையோர மக்கள் இரவு நேரங்களில் ஊர்காவற்றுறை மத்திய பகுதி வீடுகளுக்கு சென்று தங்கி வருகின்றனர் என்றும் துப்பாக்கிச் சன்னங்கள் வீடுகளுக்கு மேலாகச் செல்வதாகவும் கூறப்படுகின்றது. (அ-72)

# ஹற்றன் நஷனல் வங்கி விவசாய கடன் உதவி

(இணுவில்)

சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி மூலம் இணுவில் கிழக்கு விவசாய சம்மேளன உறுப்பினர்கள் முப்பது பேருக்கு சம்மேளனத் தலைவர் சி.திருக்குமாரின் சிபாரிசுக்கமைய விவசாய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இக் கடன் வழங்கும் நிகழ்வு சம்பந்தமாக கூட்டம் அண்மையில் இணுவில் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

இதில் வங்கி ஊழியர்கள், சம்மேளனத் தலைவர் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர். (அ-122)

# வெள்ளவத்தையில் கைதான ஆறு பேர் விளக்கமறியலில்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளில் 6 பேர் கல்கிசை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு இளைஞர்களும், இரு யுவதிகளும் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாரினால் கல்கிசை நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டதையடுத்து 6 பேரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை வெள்ளைவத்தையில் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடாத்திய தேடுதலில் 9பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் ஆறுபேரை குற்றத்தடுப்பு பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் , இவர்களின் விடுதலை குறித்து குற்றப் புலனாய்வு பொலிஸாருடன் பேசிய போதும் அது கை கூடவில்லை எனவும் தெரிய வருகின்றது. (அ-7)

# சுனாமி எச்சரிக்கைக் கருவி

## டிசம்பர் 26க்கு முன் நிறுவப்படும்

(கொழும்பு)

இந்து மா சமுத்திரத்தில் ஐ.நா. உதவியுடனான ஆழிப்பேரலை எச்சரிக்கை கருவி இம்மாத இறுதியில் நிறுவப்படாது என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்கூறியதாவது ,

ஆழிப்பேரலை எச்சரிக்கைக் கருவியானது இம்மாத இறுதியில் இயங்கத் தொடங்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் , எதிர் வரும் டிசம்பர் 26 ஆம் நாளுக்கு முன்னர் அது நிறுவப்படும்.

தேசிய அளவிலான ஆழிப்பேரலை எச்சரிக்கை அமைப்பானது மிகவும் அவசியமானது. அதுதொடர்பில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காலநிலை அவதானிப்பு திணைக்களத்தில் தேசிய ஆழிப்பேரலை எச்சரிக்கை மையம் நிறுவப் படும். அது இந்து மா சமுத்திரத்தில் நிறுவப்படும் எச்சரிக்கை அமைப்புடன் இணைந்து செயற்படும். இந்து மா சமுத்திரத்தில் நிறுவப்படும் எச்சரிக்கை அமைப்பானது பல்வேறு வழிமுறைகளிலும் ஆழிப்பேரலை குறித்த எச்சரிக்கைகளை அளிக்கும் என்றார் மஹிந்த சமரசிங்க. (அ)

# கொழும்பில் தனிநபர் விபரம் சேகரிப்பு திறமையற்ற திட்டமிடல்-மக்கள் சிரமம்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கும் நோக்குடன் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் விபரங்களை சேகரித்து கணனி மயப்படுத்தும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக் கிழமை 9 மணியளவில் இந் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஜனாதிபதிசெயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி, அரசாங்க அதிபர், கிராம சேவகர்கள், பொலிஸ் அதி காரிகள், நாரஹேன்பிட்டி சிவில் சமூக அமைப்பினர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பொது மக்களுக்கு தனிநபர் பதிவுக்கான விண்ணப்பங்களை வழங்கி னர்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் 150 பேருக்கு வழங்கப்பட்டன. விண்ணப்பப் படிவங்களை பெற பெருமளவான மக்கள் குழுமி நின்ற போதிலும் முழுமையாக விண்ணப்பங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி செயலகம் தயாராகாமையினால் 150 பேருக்கு மட்டுமே விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

ஏனையவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வந்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுமாறு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விசேட பதிவு ஏற்பாடு குறித்து நாரஹேன்பிட்டி பொலிஸார் நேற்று முன்தினம் இரவு அறிவித்துடன் விண்ணப்பங்களை பொலிஸ் நிலையத்தில் வந்து பெறுமாறும் கோரியிருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பெருமளவான மக் கள் குழுமியிருந்தனர். விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி யே வழங்கப்படும் என அறிவிக்கப்படாமையால் அவர்கள் ஏமாற்றத்துடன் நேற்று முன்தினம் திரும்பியிருக்கின்றனர். (அ-7)



நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் சுடப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த எஸ்.கிறிஸ்தோபர்.
(படம்:-எஸ்.ரி.ராஜா)

# கணினிக் கல்விப் பகுதி

## வழிகாட்டல் குறிப்புக்கள் (09)

### கணினித் துறையில் கற்க வேண்டிய விடயங்கள்:

இன்று நாம் கணினி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஊருக்கொரு கணினி என்ற காலம் மாறி, வீட்டுக்கொரு கணினி என்ற காலமிது. ஆகவே கணினி இல்லாமல் நாமில்லை. இத்தகைய கணினி மட்டும் இருந்தால் போதுமா? இதை இயக்கவும் தெரிந்திருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் நம்மில் சிலர் கணினியைக் கற்கின்றனர். அதிலும் சிலர் தொழில் வாய்ப்புக்காகவும், பொழுதுபோக்குக்காகவும் கற்கின்றனர். உங்களுக்கேற்றவாறு பல கணினிக் கற்கைநெறிகள் உள்ளன. அதை நீங்கள் உங்கள் தகுதிக்கேற்றவாறு தெரிவு செய்யவேண்டும். சில முக்கிய கணினிக் கற்கை நெறிகளைப் பற்றிப் பார்ப்போம்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கற்கைநெறியின் பெயரை சற்று வித்தியாசமாக சில கணினி நிறுவனங்கள் பாவிக்கலாம். இது பிழையல்ல. அதாவது MS Office ஐ சிலர் Business Application எனவும் ஒபிஸ் எனவும் கூறுவர். இப்படிப்பட்ட புதிய சொற்களைக் கண்டு குழம்பத் தேவையில்லை.

### கணினிக் கற்கைநெறிகளாக:

o *Microsoft Office (MS Office)*

இது கணினியின் அடிப்படை அறிவை வழங்கும் பாடநெறியாகும். அதாவது கணினியை எவ்வாறு இயக்குவது? கடிதமொன்றை உருவாக்கி அதை பிரின்ட் எடுப்பது போன்றவற்றை தெரிந்து கொள்ளும் பாடநெறி இதுவாகும். இது பெரும்பாலும் தொழில் துறைகளிலும், பாடசாலைக் கல்வியை முடித்த ஒருவர் அல்லது முதன்முறையாக கணினியை கற்க விரும்பும் ஒருவர் இக் கற்கையை தொடர்வது சிறந்ததாகும். எம். எஸ் ஒபீஸ் கற்க விரும்பும் ஒருவருக்கு கீழுள்ள பாடங்கள் போதிக்கப்படும்.

1. **MS Word** :- தட்டச்சு [Typing] நோக்கத்திற்காகவும், பிரதி எடுத்தல் போன்ற அலுவலக பணிகளுக்கேற்றது.

2. **MS Excel** :- சிறிய அலுவலக அல்லது வீட்டுக் கணக்குகளை இலகுவாக மேற்கொள்ள உதவும். பாடசாலைகளில் தவணைப் பரீட்சை முடிவுகளான சராசரி, நிலை, அதிகூடிய புள்ளி போன்றவற்றை ஒரு நொடிப்பொழுதில் அறிந்து கொள்ளலாம்.

3. **MS Access** :- பல தரவுகளைச் சேமித்து வைக்கப் பயன்படும். இது வியாபார நோக்கத்திற்கு பயன்படும்.

4. **MS PowerPoint** :- சிறு சிறு தொலைக்காட்சி விளம்பரங்களை உருவாக்க [Presentation] பயன்படும்.

இவ் **MS Office** கற்கச் சென்றால் மேற்கூறப்பட்ட 04 பிரதான அலகுகளும் கற்பிக்கப்படும். சில நிறுவனங்களில் **MS Outlook, Front Page** போன்ற தேவையில்லாத அலகுகள் போதிக்கப்படும். **MS Office** கற்கைநெறியை சாதாரணமாக ரூபா 3000 க்குள் 03 மாத காலத்தில் படித்து சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும்.

o *Diploma in Desk top Publishing*

பத்திரிகைத் துறை மற்றும் விளம்பரத் துறைகளில் பெரிதும் பயன்படும். இக்கற்கைநெறியை கற்பதன் மூலம் இலகுவாக தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்வதுடன் சுய தொழிலையும் மேற்கொள்ளமுடியும். அச்சுத்துறையில் ஈடுபாடுள்ளவர்களுக்கு இதுவொரு சிறந்த கற்கைநெறியாக விளங்கும். இக்கற்கைநெறியில் போதிக்கப்படும் அலகுகளாக:

✓ **Adope Photoshop -** இது ஸ்ரூடியோ வேலைகளுக்கு பெரிதும் பயன்படும். அதாவது கறுப்பு, வெள்ளை படங்களை நிறமாக்குதல், பழைய சிதைந்த புகைப்படங்களை சீராக்கல், டிசைனிங் போன்ற பல வேலைகளை மேற்கொள்ள முடியும். ஸ்ரூடியோ, பத்திரிகைத் துறைகளில் பயன்படும்.

✓ **Adope PageMaker** – பத்திரிகை அலுவலகங்களில் தட்டச்சு நோக்கத்திற்கு பயன்படும். இவ்மென்பொருளை பயன்படுத்தி பக்கத்தை வடிவமைப்பது இலகு. இதனால் பத்திரிகை அலுவலகங்களில் இவ் மென்பொருளையும் கோரல்ரோ மற்றும் போட்டோ சொப் போன்ற கிராபிக்ஸ் மென்பொருட்களையும் பயன்படுத்துவர்.

✓ CorelDraw - இது Pagemaker ஐ விட சற்றுக் கூடுதல் வசதி கொண்டது. இதுவும் பத்திரிகைத் துறை மற்றும் விளம்பரத்துறைகளில் பயன்படும். இவ் DTP கற்கைநெறியை பொறுத்தவரையில் செயன்முறைப் பயிற்சியே (Practical) மிக முக்கியமானதாகும். 03 மாத காலப் பகுதியில் இக்கற்கையை பூர்த்தி செய்ய முடியும். ரூபா. 4000 தொடக்கம் 5000 ரூபாவுக்குள் கற்கலாம்.

### வாரம் ஒரு இணையத்தளம்

**www.tamilanjal.com இத்தளமானது அழகு தமிழில் இமெயிலை அனுப்பும் வசதியை தமிழ் அஞ்சல் முற்றிலும் இலவசமாக வழங்குகிறது. இதைப்பற்றி பின்னர் விரிவாகப் பட விளக்கங்களுடன் பார்க்கவிருக்கிறோம்.**

**தமிழில் இமெயில் அனுப்புவது மிக இலகுவானதாகும். ஒரு முறை இத்தளத்திற்கு விசிட் செய்து தமிழில் உங்களுக்கே ஒரு மெயில் அனுப்பிப் பாருங்களேன்.**

### உங்களுக்குத் தெரியுமா?

1. உலகின் முதன் முதலாக இணைய சேவை வழங்கும் அமைப்பு (WWW - World Wide Web) எப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டது?
   1990
2. CD உலகம் முழுவதிலும் ஆக்கிரமித்த ஆண்டு எது?
   1992
3. Internet Explorer 3.0 ஐ Microsoft நிறுவனம் எப்பொழுது வெளியிட்டு வைத்தது?
   1996
4. Pentium IV ரக கணினிகளை அறிமுகம் செய்து வைத்த ஆண்டு எது?
   2001
5. Windows XP வெளியிட்ட ஆண்டு எது?
   2002
6. Linux Operating System வடிவமைத்தவரின் பெயர்?
   லினஸ் டோர்வால்ட்ஸ்
7. Spam Mail ன் விரிவாக்கம்
   Sales Promotional Advertising Mail
8. Blue tooth தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம்?
   Sun நிறுவனம்.

தொகுப்பு :


கே.ரி.சாரங்கன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
Email: kt.sarangan@gmail.com

**கேள்வி : கணினியை On செய்வது எப்படி என விளக்கவில்லை. எனவே கணினியை இயக்குவது எப்படி என சுருக்கமாகக் கூறவும்.**

***வி.விபுலன்***

**பதில் :** ஆம், இதோ முதலில் Power Switch ஐ on செய்யவும். பின் UPS இருந்தால் UPS ஐ இரண்டாவதாக இயக்கவும். பின்னர் CPU விலிருக்கும் பட்டனை அழுத்துங்கள். அடுத்ததாக Monitor ஐ On செய்த பின் கணினி பூட் (Boot) ஆவதைக் காண்பீர்கள். சிறிது நேரத்தின் பின் கணினி இயக்க நிலைக்கு வந்துவிடும். இதை Desktop என்பார்கள்.

Desktop லிருக்கும் பகுதிகளை பார்ப்போம்.




Any questions? Email us atkt.sarangan@gmail.com

## மொபைல் பிரிண்டர்



கையில் எடுத்துச்செல்லும் மொபைல் போன்போல எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் பிரிண்டர் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது டிஜிட்டல் கமராவில் இருந்து உடனுக்குடன் பிரிண்ட் எடுக்கும் வகையில் அமைந்துள்ளது. கமரா மற்றும் பிலிம் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் ஜப்பான் நாட்டு நிறுவனமான பியூஜி பிலிம் நிறுவனம் ஒரு நவீன டிஜிட்டல் கமராவை தயாரித்துள்ளது. இது பிளாஷ் லைட் பயன்படுத்தியும், இயற்கை வெளிச்சத்தை பயன்படுத்தியும் படம் எடுக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த டிஜிட்டல் கமராவுடன் இணை தயாரிப்பாக பிவி மொபைல் பிரிண்டர்–300 என்ற பெயரில் ஒரு கையடக்க பிரிண்டர் ஒன்றையும் உருவாக்கி இருக்கிறார்கள். மேலும் கமராவுக்கும் பிரிண்டருக்கும் வயர் இணைப்பு எதுவும் தேவை இல்லை. இன்பிரா ரெட் எனப்படும் அகச்சிவப்பு கதிர்களை பயன்படுத்தி வயர்லஸ் தொழில்நுட்பத்தில் இது இயங்குகிறது.

# ரஷ்ய பயணிகள் விமானம் வெடித்து சிதறியது குழந்தைகள் உட்பட 150 பேர் உடல் கருகிப் பலி


200 பயணிகளுடன் மாஸ்கோவிலி ருந்து சைபீரியாவின் இர்குத்ஸ்க் நகருக்கு சென்ற ரஷ்ய விமானம் தீப்பிடித்ததில் 150க் கும் மேற்பட்டோர் உடல் கருகி பலியாயினர். மேலும் 43 பேர் தீக் காயங்களுடன் மருத்



துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் விமானம் தரையிறங்கும் போது விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன . ரஷ்ய தலைநகரான மாஸ்கோவிலிருந்து சைபீரிய நகரமான இர்த் குஸக் நகருக்கு நேற் று முன்தினம் அதிகாலை ரஷ்ய விமானம் ஒன்று புறப் பட்டுச் சென்றது . அதில் 192 பயணிகளும் 8 சிப்பந்திகளும் இருந்தனர் பெரும்பாலானவர் கள் பைக்கால் ஏரி என்ற உல் லாசப் பொழுது போக்கு இடத் திற்கு சென்ற குழந்தைகளாவர் இன்னும் கொஞ்ச நேரத்தில் விமானம் தரையிறங்கி விடும். ஜாலியாக ஏரிக்கு செல்லலாம் என்று வண்ண கனவுகளுடன் பயணித்த அந்த குழந்கைகள் அடுத்த சில நிமிடத்தில் தாங்கள் கருகிப் போவோம் என்று தெரியாமல் ஜாலியாக கூச் சலிட்டுக் கொண்டே வந்தனர். இந்திய நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு அந்த விமானம் விபத்தில் சிக்கியது. தரையிறங்கிய போது ஏற்பட்ட கோளாறால் தாறுமாறாக அந்த விமா னம் ஓடு பாதைக்கு அருகில் இருந்த சிமெண்ட தடுப்பு மீது மோதியது. அடுத்த நொடி அந்த விமானம் குபீரென தீப்பிடித்தது .

இதில் ஒரு நிமிடத்திற்கு குறைவான நேரத்தில் 150க்கும் மேற்பட்டோர் உடல்கருகி பலியானார் கள் .கண்ணெதிரே நடந்த இந்த விமான விபத்தை பார்த்து அதிர்ச்சி யுடை ந்த விமான நிலைய ஊழியர்கள் உடன டியாக சுதாரித்துக் கொண்டு மீட் புப்பணியில் இறங்கி னர்.

விமான முற்பகுதி தீப்பிடித்துக் கொண்டிருந்ததால் பின்புறம் வழியாக தீக்காயமடைந்த பயணிகளை அவசர அவசரமாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். 43 பயணிகள் 80 சதவீதம் தீக்காயங்களுடன் உயிருக்கு



போராடிய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அந்த விமான நிலையம் உடனடியாக சீல் வைக்கப்பட்டது. தீயணைப்பு வண்டிகள் அம்புலன்ஸ் வண்டிகள் உடனடியாக அங் கு வரவழைக் கப்பட்டன. 3 மணிநேர போராட் டத்திற்கு பிறகு தீ அனைக்கப்பட்டது எனி னும் அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. விமான சிற்பந்தி கள் ஒருவரும் தப்ப வில்லை. அனைவரும் பலியாகி விட்டனர் . உல்லாசப் பயணம் சென்ற குழந்தைகள் உடல் கருகி பலியான சம்பவம் ரஷ் சியர்களை அதிர்ச்சியடைய வைத்துள் ளது.

விமான விபத்துக்குறித்து ஆய்வுநடத்த ரஷ்சிய அதிகாரிகள் சைபீரியா பறந்தனர். விபத்தில் பலியானவர்களின் உறவினர்கள் கண்ணீர் விட்டு கதறி அழுதது மனதை உருக்குவதாக இருந்தது.

குழந்தைகளின் உறவினர்கள் அதிர்ச்சி யில் உறைந்தே போயினர் தரையிறங்கும் போது விமானம் தாறுமார்றாக ஓடியதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

இந்த விபத்துக்குறித்து ரஷ்ய அதிபர் புடின் அதிர்ச்சி தெரிவித்துள்ளார். இர்த் குக்ஸ் விமான நிலையத்தில் இது இரண்டாவது மோச மான விபத்து என்று கூறப்படுகிறது. கடந்த 2001ஆம் வருடம் இதே யூலை மாதம் இதே போல தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத் தில் 145 பேர் பலியானார் கள். இந்த வரு டம் ரஷ்ய விமானம் ஒன்று கருங் கடலில் விழுந்து நெறுங்கியதில் 113பேர் பலியானார்கள். கடந்த 2004 வருடம் மாஸ்கோ அருகே இரண்டு விமா ணங்கள் நடுவானில் மோதிக்கொண்டதில் 89 பேர் பலியானார்கள்.

(கு)

# கட்சி தலைமையுடன் மோதல் போலந்து பிரதமர் இராஜினாமா



(வார்சா)

கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரண மாக போலந்து பிரதமர் கசிமீயர்ஸ் மார்கின்கியூவிக்ஸ் தனது பதவி யை இராஜினாமா செய்தார்.

புதிய பிரதமராக ஜரோஸ்லா காக்சின் ஸ்கி தேர்ந் தெடுக்கப் படுகிறார். இவர் போலந்து அதிபர் லெக் காக்சின்ஸ்கியின் சகோதரர் . உலகின் எந்த நாட்டிலும் இல்லாத வகையில், இரட்டை சகோதரர்களான இவர்கள் போலந்தின் இரண்டு உயர் பதவி களையும் வகிக்கின்றனர்.

போலந்தின் ஆளும் கட்சியான சட்டம் மற்றும் நீதிக் கட்சி யின் அரசியல் குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடி புதிய பிரதமர் குறித்து அறிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தது உட்பட பல்வேறு விஷயங்களில் காக்சின்ஸ்கி சகோதரர்க ளுக்கும் கசிமீயர்ஸுக்கும் கருத்துவேறுபாடுகள் இருந்து வந்தன. கடந்த வாரம் கட்சித் தலை மையுடன் ஆலோசிக்காமல் நிதியமைச்சரை மாற்றியபோது பிரச்சினை முற்றிவிட்டது என்று போலந்து அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய பிரதமர் ஜரோஸ்லா காக்சின்ஸ்கி பொறுப்பேற்ற பின்னர் முதல் வேலையாக நிதி யமைச்சரை மாற்றிவிடுவார். மற்றபடி அமைச்சரவையில் மாற்றம் இருக்காது என்றும் அவர் கள் தெரிவித்தனர்.

(க)

# ஒன்பது வயது சிறுமிக்கு குழந்தை பிறந்த அதிசயம்

(யோ டி ஜெனிரோ)

பிரேசிலில் அமேசான் காட்டுப் பகுதியில் வாழும் ஒன்பது வயது சிறுமி குழந்தை ஒன் றை பெற்றெடுத்தாள்.

சிறுமி கற்பழிக்கப்பட்டதால் இந்தக் குழந் தை பிறந்ததா என பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

பிரேசிலில் அமேசான் மாகாணத்தின் தலைநகர் மானாஹஸ் . இங்குள்ள மருத்து வமனைக்கு மனாகாபோரு என்ற பகுதியில் இருந்து ஒரு 19 வயது இளம் பெண்ணும், அவரது ஒன்பது வயது தங்கையும் வந்திருந் தனர். அந்த ஒன்பது வயது சிறுமிக்கு கடுமை யான காய்ச்சல் இருந்தது.

அமேசான் காடு உலக புகழ் பெற்றவை. இங்கு பல இனத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் நாக ரீகத்தை சிறிதும் அறியாதவர்கள். ஆதி காலத்தை போலவே, வேட்டையாடுதல் , மீன் பிடித்தல் ஆகியவற்றையே தங்களது தொழி லாக வைத்திருப்பவர்கள். மருத்துவம னைக்கு வந்த இந்த இரண்டு பெண்களும் அபுரினா என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள். ஒன்பது வயது சிறுமியை பரிசோதித்த டாக் டர்கள் அந்த சிறுமி கர்ப்பமாக இருப்பதைக் கண்டு அதிர்ந்து போயினர்.

மேலும் அந்த சிறுமியால் பேசவும்முடிய வில்லை. காதும் கேட்கவில்லை. தீவிர சோத னையில் அந்த சிறுமியின் காது தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக் கப்பட்டது. தான் கர்ப்பமாக இருப்பதையே அந்த சிறுமி உணரவில்லை.

இதையடுத்து அந்த சிறுமி மருத்துவம னையில் மூன்று மாதங்கள் சிகிச்சை பெற் றார். கடந்த வார துவக்கத்தில் அந்த ஒன்பது சிறுமி , அழகிய ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தற்போது தாயும், மகளும் பொம்மைகளை வைத்து விளையாடி வருகின் றனர். தொடர்ந்து மருத்துவமனை கண்கா ணிப்பில் உள்ளனர். இதுகுறித்து மருத்து மனை டாக்டர் ஒருவர் கூறுகையில்,

பழங்குடியின மக்களில் சிலர் சிறு வயதி லேயே குழந்தையை பெற்றெடுப்பார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் ஒன்பது வயது சிறுமிக்கு குழந்தை பிறந்துள் ளதை இப்போது தான் பார்க்கிறோம். (க)

# ஈராக்கில் குண்டுவெடிப்பு 19 பேர் பலி

ஈராக்கில் நேற்று முன்தினம் கார் குண்டுகள் வெடித்ததில் 21 பேர் பலியானார்கள் மற்றும்



பலர் படுகாயம் அடைந்தனர்

சன்னி முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஆதமியா மாவட்டத்தில் உள்ள ஒரு மசூதி அருகே இந்த குண்டுகள் வெடித்தன என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தவிர மற்றொரு இடத்திலும் குண்டு வெடித்து இதில் பலியானோர்களின் எண்ணிக்கை அதிக மாக இருக்கும் என்று தகவல் அறிந்த வட்டாரங் கள் தெரிவித்துள்ளன. 2 கார்க்குண்டுகள் ஒரே நேரத்தில் வெடித்ததில் 14 கார்களும் சேதமடைந் தன எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம்களின் மசூதிக்கு முன்பு கார் குண்டு வெடித்ததில் 4பேர் காயமடைந்தனர் . கடந்த வெள் ளியன்று நடந்த கார் குண்டு தாக்குதலில் 2 பேர் பலியானார்கள். அமெரிக்க படைகள் ஈராக்கில் கால்வைத்திலிருந்தே அங்கு இது போன்ற துய ரச் சம்பவங்கள் நடக்காத நாட்களே இல்லை.

(அ)

# சவுதி அரேபியா சிறையிலிருந்து 7தீவிரவாதிகள் தப்பியோட்டம்

(ரியாத்)

சவுதி அரேபியாவில் வன்முறையில் ஈடு படும் தீவிரவாதிகளை ஒடுக்க தீவிர வேட்டை நடந்து வருகிறது.

கடந்த 2மாதங்களில் 42 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் அல் -கொய் தா இயக்கம் தொடர்புடையவர்கள் மற்றும் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கின் றனர்.

இவ்வாறு பாதுகாப்பு விதி முறைகளை மீறி செயல்பட்டதாக 7பேர் ரியாத் நகரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்த 7 கைதிகளும் சிறையில் இருந்து திடீரென்று தப்பி ஓடிவிட்டனர். இவர்களில் 6பேர் சவுதி அரேபியாவையும் , ஒருவர் ஏமன் நாட்டையும் சேர்ந்தவர்கள் என்று கூறப்படு கிறது. இதை அந்நாட்டு உள்துறை அமைச் சகம் ஒப்புக்கொண்டது. ஆனால் அந்த 7 பேரும் எப்படி தப்பினார்கள் என்ற விவரம் வெளி யிடப்படவில்லை.

இதற்கிடையில் தப்பி ஓடிய 7 கைதிகளும் அல்-கொய்தா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகள் என்று அல்-அரபியா டெலி விஷன் கூறியது. ஆனால் அரசு அதிகாரி கள் இது பற்றி உடனடியாக கருத்து எதுவும் தெரி விக்கவில்லை.

இருப்பினும் உள்துறை அமைச்சக அதி காரி கூறுகையில், தப்பிஓடிய 7 பேரும் திரும்பி வந்து சரண் அடைந்தால் ஒருவே ளை மன்னரின் கருணையால் மன்னிப்புக்கிடைக்க வாய்ப்பு உண்டு. இல்லையென் றால் பாது காப்புப்படையினர் அவர்களை வேட் டையா டி பிடிப்பார்கள் என தெரிவித்தார். (க)

# மெக்சிக்கோவில் அதிபர் தேர்தலை எதிர்த்து கலவரம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவில் கடந்த சில நாட்க ளுக்கு முன்பு அதிபர் தேர்தல் நடைபெற்றது. இந் தத் தேர்தலில் ஆளும் தேசிய நடவடிக் கை கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அந்தக் கட்சிக்கு 35.88 சதவீத வாக்குகள் கிடைத்தன. அந்தக் கட்சியின் சார்பில் போட்டி யிட்ட பிலிப்பி கால்டிரான் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஜனநாயக புரட்சி கட்சி சார்பில் போட்டியிட்ட ஆண்ட்லிஸ் மேனுவர் லோடபட் ஒபரேட்டர் 35.31 சதவீத வாக்குகள் பெற்று தோல்வி அடைந்தார். வாக்கு எண்ணிக்கையில் தில்லு முல்லு நடந்ததாக தோல்வி அடைந்த ஜன நாயக புரட்சி கட்சியினர் புகார் கூறி வந் தனர்.

இதையடுத்து தேர்தலை எதிர்த்து அந்தக் கட்சியினர் கலவரத்தில் ஈடுபட்டனர். அதிபர் தேர்தல் வெற்றியை ரத்து செய்ய வேண்டும். வாக்குகளை மீண்டும் எண்ண வேண்டும் என்று வற்புறுத்தி கலவரத்தில் ஈடுபட்டனர்.

மெக்சிக்கோ நகரில் ஒரு இலட்சத்துக் கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட பிரமா ண்ட பேரணி நடைபெற்றது. அதிபர் தேர்தலை இரத்து செய்யவேண்டும்என்று தேர்தல் ஆணை யத்திலும், சுப்ரீம் கோர்ட்டிலும் ஆளும் கட்சி வழக்கு தொடர்ந்தது. (க)

## இன்று ஒரு தகவல்

# நோய் நீக்கும் கோதுமை

ஒரு அம்மா அவரின் வீட்டுக்காரைப் பார்த்து "கொள்ளு உடம்புக்கு நல்லதாம் அவித்துத் தருகிறேன் சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டார். இவர் மிகவும் யதார்த்தமாகத் தான் கேட்டார். ஆனால் இதைக்கேட்டவுடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. என்னை என்ன குதிரையென்று நினைத்துவிட்டாயா? என்று சொல்லிச்சண்டைக்குப் போய் விட்டார். சரி... கேள்வரகு இருக்கிறது... களி செய்து தருகிறேன் சாப்பிடுகிறீர்களா? என்று கேட்டார். நீ என்ன பெரிய ஜெயில் அதிகாரியென்று நினைப்போ எனக்குகளி கிண்டிப்போடுவதற்கு ! என்று இவர் சத்தம் போட்டார் இவரை எப்படிச் சமாளிப்பது என்பது அவருக்குத் தெரியவில்லை கொஞ்சம் யோசித்தார். சரி கோதுமை ரவை இருக்கிறது உப்புமா பண்ணித் தரவா? என்று கேட்டுப்பார்த்தார் என்னை என்ன டயபிட்டீஸ் நோயாளி என்று நினைத்தாயா? என்று கத்தினார்.

கடைசியாக அந்த அம்மா ஒரு வழியைக் கடைப்பிடித்தார். அதிலேதான் அவர் சரியாக வந்தார். மறுநாளில் இருந்து எது இருந்தாலும் போடு சாப்பிடுகிறேன் என்று உட்கார்ந்துவிட்டார். அப்படி ஒன்றும் இவர் பெரிதாக எதையும் செய்துவிடவில்லை வீட்டில் எதுவுமே இல்லை என்று சொல்லி ஒரு நாள் முழுவதும் பட்டினி போட்டார். அவ்வளவுதான் அதன்பின்னர் அவர் எதையும் சாப்பிடுவதற்குத் தயாரானார். கோதுமை உப்புமா சாப்பிடுகிறீர்களா? என்று கேட்டால் எனக்கு என்ன சர்க்கரை வியாதியா? என்று கேட்டாரல்லவா? அதிலேயும் விஷயம் இருக்கிறது.

இருதயநோய், நீரிழிவு நோய் என்பவற்றைத் தடுப்பதற்கு கோதுமையில் உள்ள நார்ச்சத்து மிகவும் உபயோ கப்படுகிறதாம். ஒரு மகளிர் கல்லூரியில் மனையியல் பாடம் படிக்கிற மாணவிகள் ஒரு நாள் வந்து கோதுமையில் உள்ள குணம் என்ன என்பதை விபரமாகச் சொல்லி விட்டுப் போனார்கள். ஆதிகாலத்தில் இருந்து கோதுமைக்கும் மனிதனுக்கும் சம்பந்தம் இருந்து வந்திருக்கிறதாம். எகிப்து நாட்டில் நைல் நதிக்கரை ஓரத்தில் கிடைத்த பழங்கால கல்வெட்டுக்களில் கூட கோதுமை பற்றிய விபரங்கள் இருக்கின்றனவாம். அதை எப்படிப் பயிர்செய்வது மாவாக்குவது, உணவுப் பண்டம் தயார் செய்வது, சம்பந்தமான வார்த்தைகள் அந்தக் கல்வெட்டில் இருக்கிறதாம் அது மட்டுமில்லை அங்கு சில கல்லறைகளைத் தோண்டிப் பார்த்தபோது செத்தவர்களுடன் கோதுமைப் பண்டங்களையும் வைத்துப் புதைத்திருந்தார்களாம்.

இனறைக்கு 25 நாடுகளில் அரிசி, அடிப்படையான உணவு 45 நாடுகளில் கோதுமை அடிப்படையான உணவு. அகத்தியர் குணபாடம் என்னும் ஒரு நூல் உண்டு. கோதுமை அந்தக்காலத்தில் மருந்துப் பொருளாகப் பயன்பட்டுக்கொண்டு வந்தது. என்கிற விபரம் அதில் இருக்கிறது. கோதுமையைச் சோறாக்கிச் சாப்பிட்டால் தேகபலம் கூடும. உடைத்து நொய்யாக்கிக் கஞ்சியாக வைததுச் சாப்பிட்டால் வாதசுரம், தடிமன், கபம் எல்லாம் போய்விடுமாம் அரைத்து மாவாக்கி அடைபண்ணிச் சாப்பிட்டால். உடல் வன்மை அதிகரிக்குமாம் இந்த விபரமெல்லாம் அகத்தியர் குண்பாடத்தில் இருக்கிறதாம் இப்போது டாக்டாகள் அதைச் சிபார்சு செய்கிறார்கள். கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்குத் தேவைப்படுகிற புரதச் சத்து சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து, B உயிர்சத்து போன்றனவெல்லாம் கோதுமையில் இருக்கின்றன.

இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் கோதுமை உணவு கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் அதிகமாகச் சாப்பிட்ட மாதிரி ஒரு நிறைவு வந்துவிடும். அதனால் சாப்பிடுகிற அளவுகுறைந்துவிடும். அதனாற்றான் உடல் குண்டாக பருமானாக இருப்பவர்களுக்கு அதை சிபார்சு செய்கிறார்கள் காவேரி ஓரத்தில் விளைகின்ற வெற்றிலையைக் கொடுத்துவிட்டு கங்கை ஓரத்தில் விளைகிற கோதுமையை வாங்கிக்கொள்வோம் என்றார் பாரதியார். அதாவது கங்கை நதிப்புறத்துக்கோதுமைப்பண்டம் காவேரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம் என்றார். கோதுமைப் பலகாரம் சாப்பிட்டு வெற்றிலை போட்டுக்கொண்டு உட்கார்ந்தால் அதுவும் சுகந்தான்.

அந்தகாலத்தில் கோதுமைநிறைய விளைகிற தேசம் ஒன்று இருந்தது. அதற்கு ஒரு இராஜா. அந்த இராஜா அமைச்சரைக் கூப்பிட்டு ஒரு நாள் என்ன அமைச்சாரே! நம்மிடம் கையிருப்பிலிக்கிற கோதுமை இன்னும் எவ்வளவு நாட்களுக்குப் போதுமானது என்று கேட்டார். இன்னும் இரண்டு வருடங்களுக்குப் போதும் மகாராஜா என்றார் அமைச்சர். இதைக் கேட்டதும் இராஜா மிகவும் சந்தேஷப்பட்டார். அப்படியென்றால் இன்னும் இரண்டு வருடங்களுக்கு நமது நாட்டில் பஞ்சமேயில்லையென்றார். மிகவும் மகிழ்ச்சியுடன் அமைச்சர் தலையைச் சொறிந்து கொண்டு கிட்டப்போனார். அப்படி இல்லை மகாராஜா! நான் சொன்னது நம் இருவர் வீடுகளிலும் இருக்கிறகையிருப்பைப் பற்றி என்றார்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# கண்காணிப்புக் குழுத் தலைவராக மீண்டும் ஹக்ருப் ஹொக்லண்ட்?

(கொழும்பு)

யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளை செப்ரெம்பர் முதலாம் திகதிக்குள் வெளியேற்ற வேண்டும் என விடுதலைப்புலிகள் கோரியுள்ளதையடுத்து



கண்காணிப்புக்குழுவில் எத்தகைய மாற்றங்களை செய்வது என்பது தொடர்பில் நோர்வே தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. என்று இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் எரிக் நேனஸ்பேர்க் தெரிவித்தார்.

கண்காணிப்புக்குழுவில் மேற்கொள் ள வேண்டிய மாற்றங்கள் குறித்து குழுவில் அங்கம் வகிக்கும் நோர்டிக் நாடுகளுடன் நோர்வே கலந்துரையாடி வருகின்றது. கண்காணிப்புக்குழுவின் தலைவராக சுவீடன் நாட்டைச் சேர்ந்த உல்ப் ஹென்றிக்சன் பதவி வகிப்பதனால் அவரை மாற்றி விட்டு குழுவின் முன்னாள் தலைவரான நோர்வேயை சேர்ந்த ஹக்ரூப் ஹொக் லண்டை மீண்டும் தலைவராக நியமிப்பது குறுத்தும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்காணிப்புக்குழுவின் தற்போதைய நிலை குறித்தும் புலிகளின் கால அவகாசம் தொடர்பாகவும் கருத்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில்,

கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான பின்லாந்து டென்மார்க் சுவிடன் ஆகிய நாட்டவர்களை வெளியேற்ற வேண்டுமென விடுதலைப்புலிகள் காலக்கெடு விதித்துள்ளனர். இதனால் குழுவில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் குறித்து நாம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றோம்.

கண்காணிப்புக்குழுவின் தற்போதைய தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் மற்றும் பிரதித் தலைவர் டொமி லக்ன் மயர் ஆகியோர் ஐரோப்பிய ஒன்றிய நாடான சுவீடனை சேர்ந்தவர்களாகவுள்ளனர்.

ஆகவே, ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர் களை வெளியேற்ற நோர்வேயும் இதர நோர்டிக் நாடுகளும் தீர்மானிக்குமானால் குழுத்தலைவர் ஹென்றிக்சனையும் மாற்றவேண்டி ஏற்படும். அப்படியொரு நிலை உருவானால் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவராக பணியாற்றிய ஹக்ரூப் ஹெக்லண்டை மீண்டும் தலைவராக நியமிம்பது குறித்தும் ஆலோசிக்கப்படலாம். நோர்வே நாட்டவரான இவருக்கு கண்காணிப்புக் குழுத் தலைவராகப் பணி புரிந்த அனுபவம் உள்ளது. எனவே இவரை நியமிப்பது சிறந்தது என நோர்வே கருதலாம்.

இவை தொடர்பாக ஆலோசனைகள் மட்டுமே இடம் பெற்று வருகின்றது. உறுதியான முடிவு எதுவும் எடுக்கப் படவில்லை.செப்ரெம்பர் முதலாம் திகதி வரை எமக்கு கால அவகாசம் உள்ளமையால் மாற்றம் குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் இவ்வாரம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடைபெற்ற கண்காணிப்புக்குழு தொடர்பான நோர்டிக் நாடுகளின் கூட்டத்தில் பங்கு பற்றிய பின்னர் நாடு திரும்பிய ஹென்றிக்சன் இவ்வாரம் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்திப்பார் . இதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது என்று கண்காணிப்புப் குழுவின் பேச்சாளர் ஓமர்சன் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது விடுதலைப்புலிகளுடன் பல்வேறு விடயங்கள் குறித்தும் பேசப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இது இவ்வாறிருக்க தடைப்பட்டுள்ள சமாதான முயற்சி குறித்தும் கண்காணிப்புக்குழு தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலை குறித்தும் ஆராய்வதற்காக நோர்வேயின் சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ளார் .நோர்வேயில் தங்கியுள்ள இங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் விரைவில் கொழும்புக்கு வரவுள்ளார். (அ)

# கிளிநொச்சி காணி அலுவலகத்தின் அவல நிலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசத்தில் காணி மாற்றம் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் பல கிளிநொச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தில் நீண்ட காலமாக தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது

சம்பந்தப்பட்ட மக்கள் தங்கள் காணிகளை உறவினர்களுக்கு மாற்றம் செய்வதற்காக முறையான ஆவணங்களை ஒப்படைத்து மூன்று வருடங்களுக்கு மேலாகியும் கூட எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் அவ்வாவணங்கள் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே இக்காணி அலுவலகத்தில் காணி அலுவலருடன் தங்கள் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்கள் தொடர்பு கொள்வதில் நிலவிய கெடுபிடிகள் காரணமாகப் பலர் காணி அலுவலகத்திற்கு செல்வதையே தவிர்த்துவந்தனர் எனவும் தற்போ து அந்த அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டு புதிய காணி அலுவலர்கள் மூவர் நியமிக்கப்பட்டதையடுத்து தேங்கி க் கிடந்த காணி அலுவல்கள் தற்போது பெரும் சிரமங்க ளுக்கு மத்தியில் சீர் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி பிரதேசத்தில் பெரும்பாலான பொது மக்களின் குடியிருப்பு காணிகளுக்கு தற்காலிக அனுமதி பத்திரங்களே வழங்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாக அவற்றிற்கு நிரந்தர அனுமதிப் பத்திரங்களோ உறுதிகளோ வழங்கப்படவில்லை . அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை. தற்போது தற்காலிக அனுமதிப் பத்திரங்களை நிரந்தர அனுமதிப்பத்திரங்களாக மாற்றும் பணிகள் ஓரளவிற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .

இவ்வேளையில் காணிமாற்ற விடயங்கள் வருடக் கணக்கில் தேங்கிக் கிடப்பதால் மக்கள் நிரந்தர அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்வதிலும் தடை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

# 15 வருடம் லண்டனில் வாழ்ந்தவருக்கு நாடு கடத்தப்படும் அபாயம்?

(கொழும்பு)

7 வருடங்களுக்கு முன்னர் தனது 15 ஆவது வயதில் பிரிட்டனுக்குள் சட்ட விரோதமாக நுழைந்து தற்போது 22 வயதாகியிருக்கும் இலங்கையர் ஒருவர் நாடு கடத்தக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக பிரித்தானிய குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.


தமது கிராமத்தில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக தனது 15 வது வயதில் பிரிட்டன் சென்ற முகமட் சம என்பவர் அங்கு பிரித்தானிய பெண்ணொருவரை திருமணம் செய்து 17 மாத மகன் ஒருவரையும் பெற்றுக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றார்.

இந்த நிலையிலேயே பிரிதானிய அதிகாரிகள் இந்த திடீர் செய்தியை தெரிவித்துள்ளார்கள்.

அப்படியாக அவர் நாடு கடத்தப்படும் பட்சத்தில் அவரது பிரித்தானிய மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டே நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரச்சினைக்கு பிரித்தானிய ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்கி செய்தி வெளியிட்டுள்ளது

அதேவேளை , இவரால் பிரித்தானிய அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனு தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (து-9)



ஆசிய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க துணைச் செயலர் கிறிஸ்டோபர் (வலது) ஜப்பானிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாரோ ஆசோவை டோக்கியோவில் சந்தித்துப் பேசினார்.

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 22

முருக-தனுஷ்கோடி



பின்னர் காந்திஜி பெப்ரவரி மாதம் முதல் தேதி மதுரைக்குப் புறப்பட்டார். அவருடன் காமராஜும் சென்றார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலையும் பழனியாண்டவர் கோவிலையும் தரிசிக்கவே காந்திஜி அன்று விஷேட ரயிலில் புறப்பட்டுச் சென்றார். காந்திஜியுடன் ராஜாஜியும் பத்திரிகை நிருபர்களும் சென்றனர். ஒருவொரு ரயில் நிலையத் திலும் மக்கள் கூடியிருந்து காந்திஜிக்கு மரியாதை செலுத்தினார்கள். காந்திஜி பேசுவதற்கு வசதியாக அவர் சென்ற விசேஷ ரயிலில் மேடையும் ஒலிபெருக்கியும் அமைக்கப்பட்டிருந்தன. சென்னையிலிருந்து காந்திஜியை ஏற்றிச்சென்ற விசேஷ ரயில் அச்சரபாக்கத்தில் நின்றது காந்திஜி மேடை மீது ஏறினார் பேசுவதற்காக ஒலிபெருக்கியை ராஜாஜி பிடித்துக்கொண்டார் மதுரைக்கும் பழனிக்கும் சாமி தரிசனத்துக்குச் செல்கிறேன் உங்கள் ஆசியை வழங்குங்கள் என்று கூறி அச்சரபாக்கத்து மக்களைப் பார்த்துக்கைகூப்பி வணங்கினார் மக்கள் கரகோஷம் செய்தனர். இந்த ஆரவாரம் அடங்கச் சில நிமிடங்கள் பிடித்தன.

நான் மதுரை மீனாட்சி கோவிலுக்குச் செல்கிறேன் அதற்குக் காரணம் உங்கள் ராஜாஜிதான் எல்லோருக்கும் அந்தக் கோவிலை ராஜாஜி திறந்து விட்டிருக்காவிட்டால் நான் அங்கே செல்ல இன்று புறப்பட்டிருக்க மாட்டேன்.

என்றுஅச்சரபாக்கம் மக்கள் மத்தியில் காந்திஜி தொடர்ந்து கூறினார் முதலில் கரகோஷம் செய்த மக்கள் இப்போது கரகோஷமோ ஆரவாரமோ செய்யவில்லை .ராஜாஜியின் செல்வாக்கு அவர்மீதுமக்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காந்திஜிக்கு விளங்கியது. அச்சரபாக்கம் நிகழ்சிக்குப்பின் காந்திஜி பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார் அப்போதெல்லாம் அவர் மக்கள் மத்தியில் ராஜாஜியைப் பற்றியும் அவர் சம்பந்தப்பட்ட விஷயங்கள் குறித்தும் தமது பேச்சில் குறிப்பிடவே இல்லை.

தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் முடிந்ததும் காந்திஜி சென்னையை விட்டுப்புறப்பட்டார். 1946 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி மீண்டும் அவரது ஹரியன் பத்திரிகைய ய ஆரம்பித்தார். அதில் ராஜஜியைப்பற்றிக் காந்திஜி எழுதினார். அப்போது 'கிளிக்' என்று குறிப்பிட்டிருந்தார். ஒரு சிறு கோஷ்டி (கிளிக்) தான் ராஜாஜியை எதிர்ப்பதாக எழுதினார் அவர் எழுதியது வருமாறு:

ராஜாஜி எனது பழைய நண்பர்களில் ஒருவர். நான் கடைப்பிடிக்கும் கொள்கைகளை விமர்சனம் செய்வதில் அவர் சிறந்தவர் . இது எல்லோரும் அறிந்த விஷயம் . அவர் என்னுடன் 1942 ஆம் ஆண்டு கருத்து வேறுபாடு கொண்டார் என்பது எனக்குத் தெரியும். இந்தக் கருத்து வேறுபாட்டை அவர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். அதற்காக அவரைப்பாராட்ட வேண்டும். ராஜாஜி ஒரு பெரிய சமூக நலவாதி , சமூக சீர்திருத்தக்காரர் . அவர் நம்பிக்கைப்படி அவர் நடந்து கொள்ளஅஞ்சியவரல்ல. அவரது அரசியல் அறிவும் நாணயமும், சந்தேகத்துக்கு இடமில்லாதவையாகும். இதனால் அவருக்கு எதிராக ஒரு கோஷ்டி (கிளிக்) இருப்பது கண்டு என் மனம் வேதனைப்பட்டது. சென்னையில் இந்தக் கோஷ்டியின் ஆதிக்கம் இருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது . ஆனால் மக்கள் ராஜாஜியிடம் பக்தி கொண்டிருக்கிறார்கள் . நான் சாமி தரிசனத்துக்காகச் சென்றேன். அப்போது வழி நெடுக்க மக்கள் கூட்டம் அதிக அளவில் இருந்தது. ஆர்ப்பாட்டமும் இருந்தன. மக்களிடம் அவருக்கு செல்வாக்கு இல்லை என்றால் இவை இருந்திருக்க முடியாது. இவை அனைத்தும் எனக்காக ஏற்பட்டது. என்று எண்ணுவதற்கு நான் தற்பெருமைக்காரனோ அறிவில்லாதவனோ அல்ல .தங்களுக்கு எது நல்லது என்று படுகிறதே ா அதையே தென்னாட்டு க் காங்கிரஸ்காரர்கள் செய்வார்கள் . ராஜாஜியை த்தவிர வேறு யாரும் தற்போதைய நிலைமையில் பொறுப்பேற்க முடியாத அந்த வேலைகளுக்கு ராஜாஜியின் சேவையை இழக்க வேண்டாம் என்று நான் எச்சரிக்கை செய்யாவிடில் காங்கிரசுக்கு நான் உண்மையானவனாக இருக்க முடியாது இவ்வாறு காந்திஜி எழுதினார்.

காந்திஜி எழுதியிருந்ததைப் படித்தார் காமாரஜ். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருந்தது அவருக்கு .காந்திஜியின் எழுத்து காமராஜுக்குத் தாங்க முடியாத வருத்தத்தை அளித்தது.

ராஜாஜிக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு இருந்தது. மக்களின் அந்த எதிர்ப்பைக் காந்திஜி கிளிக் என்று எழுதுகிறார் .இந்த இரண்டுக்கும் நடுவில் சிக்கித் தவிப்பதைவிடத் தகராறுக்குக் காரணமாய் இருந்த பார்லிமெண்டரி போர்டில் இருந்து ராஜினாமா செய்வதுதான் நல்லது என்ற முடிவிற்குக் காமராஜ் வந்தார். காந்திஜிதான் தேசப்பிதா இந்த நாட்டிற்கு சுதந்திரம் வாங்கித்தர அவராலேயே முடியும் என்ற எந்த மகானைப்பற்றிக் காமராஜ் நினைத்திருந்தாரோ அவரே கிளிக் என்று எழுதியது கண்டு அதை பொறுத்துக்கொள்ளும் பொறுமை காமராஜுக்கு இல்லை.

1946 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி காமராஜ் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

பார்லிமெண்டரி போர்டு கூட்டம் அறிவித்தபடியே நேற்று நடந்தது. அந்த நேரத்தில் காந்திஜியின் கட்டுரை வெளியாகியிருந்தது. அது முழுக் கவனத்தையும் ஈர்த்தது. காந்திஜியின் அறிக்கையையைத் தொடர்ந்து பார்லிமெண்டரி போர்டு கூட்டத்தை ஒத்திவைத்தேன்.

ஹரிஜன் பத்திரிகையில் ராஜாஜியைப் பற்றியும் தமிழ்நாடு காங்கிரசைப் பற்றியும் காந்திஜி எழுதியிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அதிகார பூர்வமான தலைவர் விதிமுறைகளின் படிதான் பார்லிமெண்டலியை போர்டை நான் நியமனம் செய்தேன். காந்திஜிடம் நான் மிகவும் மரியதை வைத் திருக்கிறேன் சென் னையிலும் தமிழ் நாட்டிலும் காந்திஜி சுற்றுப்பயணம் செய்யும் போதும் நான் அவருடனேயே இருந் தேன் . தமிழ் நாட்டில் காந்திஜி இருந்த போது தமிழ்நாடு காங்கிரஸ் விஷயங்கள் குறித்து எங்களிடம் பேசவில்லை கிளிக் என்ற ஒரு பதத்தை அவர் உபயோகப் படுத்தியுள்ளார் அது மிகுந்த வேதனையை அளிக்கிறது. இந்தத்தகராறுகளுக் காரணமாய் இருக் கும் பார்லிமெண்டரி போர்டுத் தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொள்கிறேன் என்று காமராஜ் அந்த அறிக்கையில் கூறி யிருந்தார். கிளிக் என்று எழுதியது குறித்து பி.வரதராஜுலுநாயுடு காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்த கடிதத்தில் அவர் பின்வருமாறு எழுதினார். தென்னாட்டில் காந்தி தர்மத்திலும் காங்கிரஸ் திட்டத்தி லும் பரிசுத்தமான பக்தியுடன் உழைத்து வருபவர்களில் காமராஜர் முன்னணியில் இருக் கின்றார். உயர்தரமான நாடார் அவர்களைக் குறித்து தாங்கள் தவறாக எழுதியது நல்லதல்ல . இவ் விஷயத் தில் தாங்கள் தலையிடாமல் இருப்பது நல்லதென்பதைத் தங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித் துக் கொள்கிறேன் என்று வரதாராஜுலு நாயுடு அந்தக் கடிதத்தில் குறிப் பிட்டிருந் தார்.

உடனே காந்திஜி வரதராஜுலு நாயுடுவுக்கு ஒரு தபால் கார்டில் பதில் எழுதினார் சரி அப்படியே செய்கிறேன் . நாடார் தகராறில்நான் இனி ஈடுபடுவதில்லை என்று காந்திஜி அதில் எழுதியிருந்தார் இதற்கிடையில் பட்டாபி சீதாராமையா காந்திஜியை நேரில் கண்டு தமிழ் நாட்டு நிலைமையை விளக்கினார்.

(தொடரும்)

# புதிய படகு வழங்குமாறு அரச அதிபரிடம் நெடுந்தீவு பிரதேச மக்கள் கோரிக்கை

(நெடுந்தீவு)

ஆறாயிரம் மக்கள் வாழும் நெடுந்தீவு பிரதேசத்திற்கு அரசாங்கம் புதிய படகு ஒன்றை வழங்க முன்வரவேண்டும் என நெடுந்தீவு பிரதேச மக்கள் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

45 வருட பழமை வாய்ந்த குமுதினி படகு சேவையாற்றிய நாட்களை விட ஓய்வு எடுத்த நாட்களே அதிகம். இப்படகு அடிக்கடி பழுதடைந்து விடுகி றது. அபிவிருத்தி அதிகார சபையினால் நடாத்தப்படும் படகுச் சேவைகள் அனைத்தையும் இலவச போக்குவரத்து சேவைகளாக அரசு கடந்த மாதம் அறிவித்திருந்த போதும், இந்த இலவச சேவையை பெறும் வாய்ப்பு எமக்கு கிடைக்கவில்லை. எமது மக்களுக்கும் எமது பிரதேச அபிவிருத்திக்கும் ஒரு ஒழுங்கு முறையில் அமைந்த படகு சேவை இருந்தால் தான் மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாகவிருக்கும். பல்வேறு தடவைகள் நெடுந்தீவுக்கு சீரான படகு சேவையை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரியிருந்தும் அது இதுவரை கவனத்தில் எடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் எமது மக்களின் போக்குவரத்து விடயங்களை கவனத்தில் எடுப்பதாக தெரியவரவில்லை.

அரச வரவு- செலவு திட்டத்தினூடாக கிடைக்கும் நிதியத்தில் இருந்தும் எதுவும் ஒதுக்கப்பட்டதாக எமக்குத் தெரியவில்லை. மாவட்ட அரச அதிபர் என்ற வகையில் எமது மக்களின் போக்குவரத்து சேவைகளை இலகுபடுத்துமாறு தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவதாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-7)

### இராணுவத்தளபதி மீதான தற்கொலைத் தாக்குதல்

# அடையாள அட்டை பெற்றுக்கொடுத்த சிங்களக் கிராம அலுவலர் கைது

(கொழும்பு)

இராணுவத் தளபதியை இலக்கு வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இராணுவ தலைமையகத்தில் தற்கொலைக்குண்டுத்தாக்குதல் நடத்திய குண்டுதாரிப் பெண் றம்புக்கனை பிரதேச வாசியென அவருக்கு தேசிய அடையாள அட்டைபெற்றுத்தர உதவிய றம்புக்கனைப்பிரதேச சிங்கள கிராம சேவகர் ஒருவரை இரகசிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி கிராம சேவகர் இதற்கென 5ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுள்ளாரென இரகசிய பொலிஸ் உயரதிகாரியொருவர் மேலும் தெரிவித்தார். மேற்படி புலிப்பெண்பேராளிகளை கிராம சேவகரிடம் அழைத்துச் சென்று அடையாள அட்டையை பெற்றுத்தருமாறு தற்போது கைதாகியுள்ள சிங்களப் பெண்ணும் அவரது தமிழ்க் கணவரும் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம், குருணாகல் வீதியில் வசித்த மேற்படி புலிப்பெண் போராளியை றம்புக்கனைப் பகுதியில் வசிப்பவர் என தெரிவித்து தேசிய அடையாள அட்டை பெற உதவி புரியுமாறே கிராம சேவையாளரை அவர்கள் வேண்டியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க இராணுவத் தளபதியை தாக்குவதற்காக வந்திருந்த புலிப்பெண் போராளி உதவி ஒத்தாசை செய்தால் சிங்களப் பெண்ணின் கணவருக்கு சொந்த தொழில் புரிவதற்கு பண உதவி செய்வதாக கூறிய புலிகள் முதலில் அவர் முச்சக்கரவண்டியொன்றை பெற்றுக்கொள்வதற்காக மூன்றரை இலட்சம் ரூபாவை வழங்கியதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-7)

# ரணில் -மிலிந்த மொறகொட மோதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மற்றொரு முக்கிய தலைவரான மிலிந்த மொறகொடவுக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது.

ஐ.தே.க.வின் அரசியல் விவகாரக் குழு மற்றும் செயற்குழு கூட்டங்களை தான் புறக்கணிக்க உள்ளதாகவும் ரணிலின் தலைமையை விமர்சித்தும் மிலிந்த ரணிலுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஆனால் மிலிந்த மொறகொடவின் குற்றச்சாட்டுக்களை ரணில் நிராகரித்துள்ளார். கொழும்பு மாநகரசபை தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு மிலிந்த மொறகொடவும் மஹரூப்பும் காரணம் என்றும் குற்றச்சாட்டப்பட்டது. அது தொடர்பான விசாரணை அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

கொழும்பு மாநகரசபை குளறுபடிகளுக்கு காரணமானவர்கள் மீது கட்சியின் செயற்குழு நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்திருந்தது.

இந்த நிலையில் இது குறித்து மௌனமாக இருந்த மிலிந்த மொறகொட தற்போது கட்சித் தலைமையை கடுமையாக சாடி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.அரசாங்கத்தின் பக்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாவி வரும் நிலையில் உட்கட்சி மோதல் தீவிரமடைந்து இருப்பது அக்கட்சிக்கு பாரிய பின்னடைவு என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(அ)

# அரசின் பக்கம் தாவியவர்களை கட்சியிலிருந்து நீக்க ஐ.தே.க முடிவு

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்பேற்றுள்ளவர்களை ஓகஸ்ட் 31ஆம் நாளுக்கு முன்னதாக நீக்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

அரசாங்கத்தின் பக்கம் தாவியோர் மீதான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கடிதம் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஐ.தே.க.வின் அரசியல் யாப்பின் படி கட்சியின் ஒப்புதலின்றி அரசாங்கத்தை ஆதரிப்பதோ அமைச்சுப் பொறுப்பு வகிப்பதோ கட்சி யாப்புக்கு எதிரானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க கேகலிய ரம்புக்வெல ஆகியோரை நீக்க முடிவு செய்துள்ளதாக ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் அரசாங்கத்தில் இணைந்த சுசாந்த புஞ்சிநிலமே மீது ஒழுக்காற்று நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாகவும் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

(அ)




நயினை நர்கபூஷணி அம்பாள் தீர்த்தோற்சவ விழாவின் போது அம்பாள் எழுந்தருளும் காட்சியையும் அடியார்கள் தீர்த்தக்கேணியில் நீராடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-திலீவின்பன்.)

# இளம் தாய்க்குச் சில வார்த்தைகள்

குழந்தையின் முழுமையான உடல் நலம் அது கருவில் இருக்கும் காலம் முதலே கவனிக்கப்பட வேண்டும். கர்ப்பத்தில் இருக்கும் சிசுவின் ஆரோக்கியமான, முழுமையான வளர்ச்சியை உச்சி முதல் உள்ளங் கால் வரை துல்லியமாகத் தெரிந்து கொள்ள அனுப வம் மிகுந்த வைத்தியர் செய்யும் 'ஃபோடெல் அல்ட்ரா சவுண்ட்' பரிசோதனை மிகவும் அவசியம். (குழந்தை ஆணா பெண்ணா என்று அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தவிர்க்கலாமே!)

திறமையான மகப்பேற்று மருத்துவரின் கனிவான கவனத்தின் கீழ் உங்களுக்கு ஆரோக்கியமான முழுமையான வளர்ச்சி கூடிய குழந்தை பிறக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அடுத்த சில நிமிடங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய் ந்தது குழந்தையின் இதயத் துடிப்பு, ஒழுங்கான சுவாசம், சீரான இரத்த ஓட்டம், முழுமையான மூளை வளர்ச்சியை வெளிப் படுத்தும். 'நியூ பான் ரீப்ளெக்ஸ்' (அனிச்சை செயல்கள்) இவை அனைத்தையும் அப்கார் ஸ்கோர் (Apgar Score) என்ற அடைமொ ழியில் அடக்கி குழந்தைக்கு ஒரு மதிப் பெண் கொடுப்பது குழந்தை மருத்துவரின்முதல் கடமை.

APGAR-A for appearance (Blue or Pink)
P for-Pulse Rate
G for- Grimace
R for- Respiration

நல்ல ஆரோக்கியமான குழந்தை பிறக்க பிரசவத்தின் போதே குழந்தை நல மருத்துவர், மகப்பேற்று மருத்துவர் இருவரும் ஓர் அணியாகச் செயற்படுவது மிகவும் முக்கியம்.

நல்ல APGAR மதிப்பெண் பெற்ற குழந்தையின் உடல் நலன் சிறப்பாகத் தொடர்வதற்கு நான்கு முக்கிய விடயங்களைத் தாய்மார்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

## முதல்வார்த்தை: நோ டென்ஷன்

நம்பிக்கை, மகிழ்ச்சியுடன் குழந்தையைஆசையுடன்வளர்க்கத் துடிக் கும் தாய்-தந்தையர் பலவித மானமன அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டிருந்தால் அது குழந்தையின் உடல் நலத்தைப் பாதிக்கும். மேலும் குழந்தையை நல்ல முறையில் வளர்க்க வேண்டுமே என்ற இறுக்கமான சிந்தனைகள் தரும் சுமையும் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

மன அழுத்தத்தோடு தாய் குழந்தைக்குப் பால் கொடுத்தால் தாயின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட குழந்தையின் குடல்தசை சுருங்கி அடிக்கடி வாந்தி , பாலை மறுப்பது, தொடர் வயிற்று வலி, எடை கூடாமல் இருப்பது எனப் பல பிரச்சினைகள் ஏற்படும்.

தாயின் மன அழுத்தம் அதற்குக் காரணமான தந்தையின் மன் அழுத்தம் மற்றும் சுற்றம், சூழல் இரைச்சல் ஆகியவை குழந்தையின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல. மருத்துவ ஆராய்ச்சிகள் வெளிப் படுத்தும் உண்மை இது.

**இன்றைய இளம் தாய்மார் குழந்தை பிறப்புப் பற்றி நிறைய அறிந்து வைத்துள்ளார்கள். திட்டமிட்டு குழந்தை பிறப்பதை எதிர்நோக்குகிறார்கள். குழந்தை பிறந்த பின் என்னென்ன விஷயங்களில் கருத்தாக இருக்க வேண்டும் என்பது பற்றிக் குழந்தை மருத்துவரும் ஆஸ்துமா நோய் நிபுணருமான டாக்டர் ஆர். ஸ்ரீதரன் சொல்பவற்றையும் அறிந்து கொள்வோமே!**

## இரண்டாவது வார்த்தை: தாய்ப்பால் போதும்

குழந்தை-தாய் இருவரது உடல், உள்ளம் ஆகிய இரண்டின் ஆரோக்கியத்துக்கு மிகவும் தேவையானது தாய்ப்பால். அவர்களது பாசப்பிணைப்புக்கும் இது அவசியம்.

குழந்தைக்கு மிகவும் தேவையான நோய் எதிர்ப்பு சக்தி கூடியது தாய்ப்பால். எளிதில் ஜீரணமாகும். உயர்ந்த புரதச் சத்துக்கூடிய இயல்பான, இயற்கையான உணவு தாய்ப்பால்.

தாயின் கர்ப்பப்பை சுருங்கி அதன் இயல்பான அளவுக்கு வருவதற்கும் இது உதவுகிறது.

தாய்ப்பால் போதிய அளவு சுரப்பதற்கு தாய்க்கு தேவையானவை யாவை?

1.நல்ல சத்தான உணவு
2.நிறையத் தண்ணீர் குடிப் பது.
3.மன அழுத்தம் இல்லாத மகிழ்ச்சியான குடும்பச் சூழ்நிலை.

பால் அதிகம் சுரக்க பல்வேறு மருந்துகளை எடுப்பது அவசியம் இல்லை. அதனால் குழந்தைக்கு அலர்ஜி , வயிற்று வீக்கம், வயிற்று வலி ஏற்படலாம். மனப்பூர்வமாக முயற்சி செய்தும் தாய்ப்பால் கொடுக்க முடியாத தாய்மார்கள் குற்ற உணர்வுக்கு ஆளாகக் கூடாது.

குழந்தைமருத்துவர்பரிந்துரைக்கும் பாலை முறையாக, சுத்தமாக தயாரித்து அன்போடும் ஆசையோடும் கொடுங்கள். ஒருவயது முடிந்த பின் பசும்பால் கொடுக்கலாம்.

## மூன்றாவது வார்த்தை: குழந்தை மருத்துவம்

குழந்தை மருத்துவம் பயின்ற, அனுபவம் கூடிய, மனிதநேயம் கொண்ட குழந்தை நல மருத்துவர் இளம் தாய்மார்களின் மன உளைச் சலைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு ஆறுதலும், நம்பிக்கை யும் தெளிவான அறிவுரையையும் வழங்கி, வழி நடத்தப் பெரும் பங்கு வகிக்கிறார்கள். குழந்தைக்குக் காய்ச்சல் வந்தால் தான் டாக்டரைப் பார்ப்பது என்றில்லாமல் தொடர் மருத்துவப் பரிசோதனைகள் மிகவும் முக்கியம். குழந்தையின் எடை, தலைச்சுற்றளவு , நீளம், மூளை வளர்ச்சிக்கான வெளிப்பாடுகள் , தாயின் மனோபாவம் இவை யாவற்றையும் தெரிந்து கொண்டு இளம் தாய்க்கு மேலும் நம்பிக்கை யளிக்க குழந்தை நல மருத்துவரின் பரிசோதனை முக்கியம்.

அரசாங்கமே பரிந்துரைக்கும் . முத்தடுப்பு ஊசி, தட்டம்மை, மீசில்ஸ், மம்ப்ஸ், தடுப்பூசி, போலியோ சொட்டு மருந்து இவை யனைத்தையும் உரிய காலத்தில் போட வேண்டும்.

இது தவிர மஞ்சள் காமாலை ஏபிஏ-உணவு, நீர் மூலம் பரவுவது பி-இரத்தத்தின் மூலம் பரவுவது) நெருப்புக் காய்ச்சல், மூளைக் காய்ச்சல், சின்னம்மை இவை அனைத்துக்குமான தடுப்பூசிகள் கட்டாயமாகப் போட வேண்டும். ஏதோ பரீட்சையில் சில கேள்விகளை தெரிவுகளில் விட்டு விடுவ தைப்போல இந்த ஊசிகள் எதனை யும் விட்டுவிடாமல் போடவேண்டும். அப்படி போடத் தவறிவிட்டால் சிலசமயம் தவிர்க்கப்படக் கூடிய மரணங்கள் கூட நிகழலாம்.

அதேபோல குழந்தை மருத்துவத்தில் சிறிதும் அனுபவம் இல்லாத மருத்துவர்களிடம் காட்டி சிகிச்சை பெறுவது என்பது ஆபத்தான அணுகுமுறை. பலநாட்கள், பல மாதங்கள் பலன் தராத சிகிச் சைக்குப் பின் நோய் முற்றிய நிலையில் குழந்தை மருத்துவரிடமோ, குழந்தை நல சிறப்பு மருத்துவமனைக்கோ வரும் குழந்தைகளின் அவல நிலை இளம் தாய்மார்களுக்கு இது பற்றிய விழிப் புணர்வு வேண்டும்.

குழந்தை மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக வளரத் தேவையானது, ஆனால் இப்போது மிகவும் அபூர்வமாக மட்டுமே அமையக்கூடிய

## நான்காவது வார்த்தை: குடும்பச் சூழ்நிலை!

இறுக்கம் இல்லாத , அமைதியும் அன்பும் நல்ல புரிதல் நிலை கூடிய பாசவலையில் பின்னப்பட்ட தாய், தந்தை, பாட்டி, தாத்தா, அத்தை , மாமா, மாமி என்று போட்டி போட்டுக் கொண்டு குழந்தையிடம் அன்பு காட்டும் கூட்டுக் குடும்பம்.

சிறிது காலத்தில் தமிழ் அகராதியிலி ருந்து மறையப்போ கும் ஒரு வார்த்தை -கூட்டுக் குடும்பம்.

**தொகுப்பு -ராஜ்**


# கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள்கோவிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித 1 மாத, 3மாத பயிற்சிகள்

★கேக் ஐஸிங் ★கூந்தல் அலங்காரம் ★ உணவு தயாரித்தல்
★FABRIC PAINTING★ பூவேலை ★கைவேலை
★FACIAL★ சாறி பிளவுஸ், சல்வார் ; பஞ்சாபி தைத்தல்
★புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள்

இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன. புதிதாகச் சேர விரும்பும் மாணவிகள் தொடர்பு கொள்ளவும்.

மேலும் விபரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் நேரில் அறிந்துகொள்ளலாம்.

-பதிவாளர்.

(C401)


## பொதுக் கூட்டம்

(கற்கோவளம்)

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையில் பொதுக்கூட்டம் நாளை பி.ப. 3.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(அ-104)

**மணி பல்லவத்தில் மஹோற்சவம்**



**நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை**

**இன்று பூங்காவனத் திருவிழா**

## எல்லாமு மாகி நின்றாய்

சித்தியும் சித்தி தரும் தெய்வம்
ஆகித் திகழும் பரா
சக்தியும், சக்தி தழைக்கும்
சிவமும் தவம் முயல் வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்
வித்தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே
புரக்கும் புரத்தை அன்றே!

அபிராமி அந்தாதி

## அவளின் திருவிளையாடல்

*வீதி எங்கும் பக்தர் கூட்டம்*
*விழாக் கோலம் நயினா தீவின்*
*ஆடிப் பாடி அரோகராச் சொல்லி*
*அம்பிகை பாதம் தொழுவோர் நாடி*
*தேடி ஓடி வருவோர் தன்னைத்*
*தேவி என்றும் காப்பாள் உண்மை*
*மூடி மறைக்க ஒன்றும் இல்லை*
*முழுதும் அவளின் திருவிளை யாடல்*

-கவிஞர் வ.யோகானந்தசிவம்

## நயினையுறை நாகம்மையே!

நாகமதைக் குடையாகக் கொண்ட தாயே !
நாடிடுவோர் துயர் தீர்க்கும் நாகம்மையே !
சோகமதை நீக்கி அருள்பவளும் நீயே !
சுந்தரமாய் இருந்தெம்மை ஆள்பவளும் நீயே !
ஏகவரம் ஒன்றெமக்கு வேண்டுமம்மா !
எங்கள் தேசத்தின் விடியலொன்றே போதுமம்மா !
யோகமதைத் தந்தெமக்கு அருள் செய்யம்மா !
லோக நாயகியே! நயினையுறை நாகம்மையே !

மு.முத்துக்குமார்

## சுந்தரி ! நீயே தஞ்சம்

ஆழிசூழ் நயினா தீவில்
அமர்ந்தருள் புரியுந் தாயே !
ஏழ்கடல் இலங்கும் முத்தே
ஈஸ்வரி நயினைத் தாயே !
வாழ்புவி மீது நாளும்
வன்செயல் தணிந்து அமைதி
சூழ்ந்திட வழியைக் காட்டு
சுந்தரி ! நீயே தஞ்சம் !

-நயினை இராகுலன்

## தேவியே சரணம்

அம்பிகையே ஈஸ்வரியே அருள்புரிவாய் அம்மா!
அருள் வேண்டி வந்தோம் தருவாய் சிவகதியே
நம்பியே வந்துன்னை நாங்கள் கைதொழுதோம்
நல்லருள் புரிந்தே காத்திட வேண்டும் தாயே
வெம்பியே அழுது நாம் படும் வேதனைகளெல்லாம்
நீறாகிப் போகவே நீயருள் புரிய வேண்டும்
எம்பிராட்டியே உந்தன் எழிலுருவம் கண்டோம் ,
ஏழையெமக் கருளிட ஏன் இன்னும் தாமதமோ?

புண்ணியப் பதியாம் நயினையில் வீற்றிருந்தே
புதுமைகள் செய்திடும் புவனேஸ்வரித் தாயே
எண்ணியே வந்திட்டோம் கடைக்கண் பாரம்மா
ஏனிந்த மௌனம் எமக்கருள் புரிந்திடாமல் ?
மண்ணிலே நாங்கள் மாண்புடன வாழ்ந்திடவே
மறுமலர்ச்சி காட்டாயோ மதிவதனித் தாயே
கண்ணிலே வேல்நுழைந்தாற்போல்கஷ்டப்படுகிறோம்
கருணை காட்டம்மா உன்பெருமை உணர்த்தம்மா!

-கவிமணி இராசையா ஸ்ரீதரன்

ஆபத்தைக்கண்டு அஞ்சாதீர்கள்! ஆபத்தைச் சமாளிக்க வழி என்ன என்று முடிவு கண்டு நிவர்த்திக்க முயற்சி செய்யுங்கள்.

-சுவாமி இராமதாஸர்

# வலம்புரி

## நீதிபதிக்கே இக்கதி என்றால்...?

யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரனுக்கு படையினரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அவரது கார்ச்சாரதியை துப்பாக்கியால் சுட முற்பட்ட படையினரிடம் விளக்கம் கேட்ட நீதிபதியிடம் ' நாம் சந்தேகம் ஏற்பட்டால் யாரையும் சுடுவோம்' எனக்கூறியுள்ளனர்.

ஒரு நீதிபதிக்கே இவ்வாறு கூறப்பட்டுள் ளது எனின் சாதாரண பிரஜைகளின் நிலைப்பாடு எப்படியிருக்கும் என்பதை மனித சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இலங்கைப்படையினரைப்பொறுத்தவரை அவர்களுக்கு யார் என்ற கேள்வியோ, சட்டம் என்ன கூறுகிறது என்பது பற்றிய விளக்கமோ தேவையற்றது.

தமிழன் என்றால் அதுபோதும். அவர்களை எதுவும் செய்யலாம், எப்படியும் நடத்தலாம், எங்குவைத்தும் சுட்டுக்கொல்லலாம் இது அவர்களின் குருதியோடு கலந்துவிட்ட குரோதத்தனம்.

இதனை மாற்றுவது சட்டத்தாலோ அன்றி சமாதானத்தாலோ முடியாது. தமக்கான ஆட்சியை தமிழர்கள் அமைப்பதன் ஊடாகவே படையினரின் சீற்றத்திற்கு முடிபு கட்ட முடியும் என்பது முடிபாகிவிட்டது.

இது முடிந்த முடிபு. நம் முன்னோர்கள் எடுத்த முடிபும் அதுவோ. இதில் ஆய்வுகளும் மீள்பரிசீலனைகளும் தேவையற்றவை.

எனவே அதனை ஒரு புறத்தில் வைத்து விடலாம். இப்போது நாம் ஆராய வேண்டிய விடயம் யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரனுக்கு படையினரால் விடுக்கப்பட்ட கொலைப்பயமுறுத்தல் பற்றியதாகும்.

நீதி கூறுகிறவர்களுக்கே வெளிப்படையாக கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்படுகிறதெனில் அதில் இருந்து தெரிந்துகொள்ளக்கூடிய பல விடயங்கள் உள்ளன.

அதில் ஒன்று யாழ்ப்பாணத்தில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பொதுமக்கள் தொடர்பில் நடத்தப்படும் விளக்கம், விசாரணைகள்.எதுவும் எந்தப்பயனையும் தரப்போவதில்லை.

மற்றையது இலங்கை அரசின் சட்டவாக்கம் இனத்துவம் சார்ந்தது. அதில் தமிழர்களுக்கு இடம் இல்லை.இந்த உண்மைகளையே மேற்படி சம்பவம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறாயின் - யாழ்ப்பாணத்தில் அரச நீதி பரிபாலனம் செயற்திறனுடையதாக இருக்க முடிமா என்ற கேள்வி பொதுமக்களிடம் எழுவதில் அதீதமான நியாயப்பாடுகள் இருக்கவே செய்யும்.

நீதியின் ஊடாக -சட்டத்தின் ஊடாக பொது மக்களைப் பாதுகாக்கவேண்டிய நீதிபதியை அரச படைகளின் கொலைத்தனத்தில் இருந்து பொதுமக்கள் - தமிழ் மக்கள் காப்பாற்றிய வரலாற்றுப்பெருமையை நீதி கூறும் நல்லுலகம் அறிந்து கொள்ளவேண்டும்.

அதே நேரம் யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதிக்கு விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தலுக்கு இலங்கை அரசால், பிரதம நீதியரசரால், சட்டமா அதிபரால், படைத்தளபதிகளால், பொலிஸ் நிர்வாகத்தால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன என்பதை தமிழ் மக்கள் உன்னிப்பாக கவனித்துக்கொள்ளவுள்ளனர்.

நீதிபரிபாலனத்திற்கு இருக்கவேண்டிய சுதந்திரமும் பாதுகாப்பும் அரச படையினரால் மீறப்பட்டமைக்கு அதி உத்தம ஜனாதிபதி மேதகு மகிந்த ராஜபக்ஷவினால் எடுக்கப்படும் நடவடிக்கை தான் என்ன?

கொலைப் பயமுறுத்தல் விட்ட படையினர் சித்தப்பிரமை பிடித்தவர்கள் என்று கூறி தப்பிக் கொள்வார்களா? அல்லது நீதிபதியின் காருக்குள்ளும் குண்டுகள் இருந்ததாகக் கூறி குற்றம் சுமத்துவார்களா?

ஐயா! நீதிபதிகளே! சட்டவான்களே! நீங்கள் தமிழர்களாயின் உங்களையும் அரச படைகளின் துப்பாக்கிகள் விட்டுவிடப் போதில்லை. இது உண்மை. இதனை உணர்வதே தமிழர்களுக்கு நன்மை.

# நீதிபதிக்கு சுடுகுழல் நீட்டும் அரசு தமிழனுக்கு எவ்வாறு நீதிதருவார்கள்?

## தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலாலி வீதி ,பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் யாழ்.மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரனை அச்சுறுத்தும் விதமாக நடந்துகொண்ட சிறிலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட அநாகரிகமான செயற்பாட்டினை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதியின் வாகனத்திற்கு அச்சுறுத்தல் விளைவித்த இராணுவம் சம்பவம் தொடர்பாக அறிய முயன்ற நீதிபதியையும் அச்சுறுத்தியது காட்டுமிராண்டித்தனமான செயற்பாடாகும்.

இனவாதிகளின் இனவெறித்தாண்டவத்தின் உச்சக்கட்டம் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் நிலையில் தமிழ் பேசும் மக்கள் செய்வதறியாது விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

காலம் காலமாக தமிழினத்தை ஏமாற்றி அரசியல் நடத்திய சிங்களத்தலைவர்கள் பட்டியலில் மகிந்த அவர்கள் முதுசத்தைப் பேணுவதில் முன்மாதிரியாக செயற்பட்டு வருகிறார்.

சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக தமிழர்களை ஏமாற்ற நினைக்கும் மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்தோ அவரினால் ஏவிவிடப்பட்டிருக்கும் இராணுவம் எனும் பயங்கரவாதிகளிடம் இருந்தோ எமது உரிமையின் எவ்வளவு பங்கேனும் பெறமுடியாது என்பதனை இந்த பயங்கரவாதச் சம்பவம் உணர்த்துகின்றது.

உலகத்தில் எங்குமில்லாத அநாகரிகமான இராணுவம் இலங்கை அரசினுடையது என்பதை மீண்டும் ஒரு முறை மேற்படி சம்பவம் நிரூபித்துள்ளது.

நடுவு நிலை தவறாத நீதித்துறைக்கு நேர்ந்த இந்த நிலையை ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் விடுக்கப்பட்டிருக்கின்ற இறுதி எச்சரிக்கையாகும்.

அரச பயங்கரவாதம் தமிழ் மக்கள் மீது மோசமாக பிரயோகிக்கப்பட்டுக்கொண்டிருப்பதை கண்டும் காணாதவாறு மௌனிகளாய் இருக்கும் சர்வதேசம் இனியாவது வாய் திறக்கவேண்டுமென வேண்டுகின்றோம்.

அரசின் இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு முடிபு வெகு தூரத்தில் இல்லை என அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு நெல் ஏற்றுமதி- அரசு நடவடிக்கை

(கொழும்பு)

அண்மைக்கால வரலாற்றில் முதன்முறையாக இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு நெல் ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இன்னும் இரு வாரங்களுக்குள் இந்தியாவுக்கு நெல்லை ஏற்றுமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. முதற் தடவையாக 50 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை அரசாங்கம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும்.இதன் மூலம் 60 கோடி ரூபா நிதியை பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய செயற்படும் இந்தத்திட்டத்தில் சிறுபோக நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான இட வசதிகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் சேவைகள் மற்றும் விவசாய கூக்குவிப்பு அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனா தெரிவித்தார்.இந்தியாவில்உள்ள ஆர்.கே.ஜி. எக்ஸ்போட் இன்டர் நெஷனல் நிறுவனம் இந்த நெல்லை விலைக்குப் பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது.இத் திட்டம் எதிர்வரும் போகங்களில் ஏற்பட ஆரம்பிக்கும். ஜனாதிபதியின் பணிப்புரைகளுக்கு இணங்க விவசாயிகளின் நம்மை கருதியே இத்திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளது. (அ-9)

## கட்டுநாயக்காவில் கைதானவர்களின் பிணை மறுப்பு மனித உரிமை மீறலாகும்

(நீர்கொழும்பு)

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 47 பேரை கடந்த வியாழக்கிழமை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

இவர்கள் கட்டுநாயக்க விமானநிலையத்தின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முற்பட்ட வேளையில் கைதுசெய்யப்பட்டு நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களாவர்.

விடுவிக்கப்பட்டவர்கள் தவிர மேலும் 163 பேர் குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

விடுதலையான ஒவ்வொருவரும் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குடிவரவு,குடியகல்வு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்கப்படாமை அவர்களின் மனித உரிமையை மீறும் செயலாகும் என அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவினையடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

## தீர்த்தத் திருவிழா

(பருத்தித்துறை)

சரித்திர பிரசித்திபெற்ற பொலிகண்டி கந்தவனம் முருகன் நேற்று தேர் ஏறி வீதிவலம் வந்து பக்த அடியார்களுக்கு அருளளித்தார்.

இத்தேர்திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டு இறையருளைப்பெற்றனர். இன்று எம்பெருமான பக்தகோடிகள் சூழ தீர்த்தமாடுகின்றார். (அ-52)

## கைது செய்யப்பட்ட 6பேர் மீது விசாரணை

(கொழும்பு)

பண்டரவளையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சுற்றிவளைப்புதேடுதலின் போது கைது செய்யப்பட்ட 80 பேர்களில் 6 பேரைத்தவிர ஏனையவர்கள் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 6பேர் விசரணையின் பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பாசறை வெவேகலையை சேர்ந்த கணேசன் தம்பிராஜா, இராமகிருஷ்ணன் டைகர் சிவா, கந்தப்பொலையைச்சேர்ந்த எஸ் . பிரபாகர், எஸ். சிவகுமார், ஆகியயோர் உட்பட 6 பேர் தடுத்து வைக்கபட்டுள்ளவர்களாவர்

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 6பேரையும் விடுவிக்குமாறு ஊவாமாகாண சபையின் உறுப்பினரும் இ.தொ.கா. பிரமுகருமான கே. விஸ்வநாதன் கோரியுள்ளார். (து-7)

## ஏமாற்றி பணம் பறிக்கும் கும்பல்

(கொழும்பு)


தென்னிலங்கையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் அவர்களை விடுவிப்பதாகக் கூறி ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பல்களும் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக வடக்கு கிழக்கை சேர்ந்த இளைஞர் யுவதிகள் சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டு சிறைகளிலும் பொலிஸ் நிலையங்களிலும் தடுத்துவைக்கப்பட்டு வருகின்றனர்.

அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க சுமார் ஒரு இலட்சம ரூபாவிலிருந்துலஞ்சம் கோரப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள் தபடை அதிகாரிகள் மட்டு மல்லாது சில தமிழ் ஆயுதக் குழுக்களது முன்னாள் உறுப்பினர்களும் இதில் ஈடுபட்டுள்ளதாக அனுபவப்பட்டவர்கள் கூறுகின்றனர். (து-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நமக்கு வரும் நோய்கள் தற்காலிகமானவைகள். நிரந்தரமாக நம்மைப்பற்றியுள்ளது பிறவிநோய். இந்த நோயிலிருந்து நிரந்தரமாக விடுபட்டு நாம் எமது நிஜ சொரூபமான பூரண நிலையில் இருப்பது முத்தி

சுவாமி விவேகானந்தர்





கிளிநொச்சி மருத்துவமனை திறப்பு விழா நிகழ்வின் காட்சிகள்.

# தென்பகுதி மக்கள் அனுபவிக்கும் சமாதானம் தமிழர்களுக்கு இல்லை

## உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டு

(சூரிச்)

சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்தில் விடுதலைப்புலிகள் மென்மைத் தன்மையையே கடைப்பிடித்துவருவதாக அவ்அமைப்பின் சட்ட ஆலோசகரும் நியூயோர்க் சட்டத்தரணியுமான வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகள் ஊடாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியில் தன்னிச்சையான யுத்த நிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

இது போர்நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வரும் முன்னதான முன்னேற்ற நடவடிக்கையாகும்.வடக்குக் கிழக்கு மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் இடைக்கால நிர்வாகப் பிரேரணை ஒன்று விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டது.

எனினும் தென்பகுதி மக்களுக்கு இடைக்கால நிர்வாகம் விடயம் தொடர்பான தெளிவாக்கம் இல்லாத காரணத்தால்,2002 ஆம் ஆண்டு தேர்தல் மேடைகளில் இவ் விவகாரம் பாரிய சர்ச்சையாக பேசப்பட்டது.

அவ்வேளை சமாதான முனைப்பில் பாதிப்பு ஏற்படும் என்பதில் கவனத்தில் கொண்டு குறித்த யோசனையை தமது அமைப்பு வில்க்கிக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து மாற்றுத் திட்டத்தின்அடிப்படையில் விடுதலைப்புலிகளும் அரசும் சம உறுப்பினர்களாகக் கொண்ட நிர்வாகக் கட்டமைப்புக்களை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இதன் மூலம் சம அதிகாரம் தமக்குக் கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே விடுதலைப்புலிகள் இதற்கு உடன்பட்டனர். எனினும் அரசு, யாப்பு உட்பட பல காரணங்களை காட்டியதால் நிர்வாகக் கட்டமைப்பு விடயம் வெற்றியளிக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக வெளிநாட்டு மத்தியஸ்தம் இல்லாமல் இவ்விடயம் தீர்க்க முடியாமல் போய்விட்டதாக அவர் சுட்டிக்காட்டினார். இதன் மூலம் போர்நிறுத்தத்தினால் தென்பகுதி மக்கள் அனுபவிக்கும் சமாதானம் மற்றும் நன்மைகள் வடக்குக் கிழக்கு மக்களுக்குக் கிடைக்காமல் போயுள்ளதாக அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார். (ச-5)

# ஐ.தே.க.-மகிந்த முறுகலுக்கு அனுசரணையாளராக ஹக்கீம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டு வர சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்ரவூப் ஹக்கீம் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இருதரப்பினருடனும் நேற்று இரவு ரவூப் ஹக்கீம் பேச்சுக்கள் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஹக்கீமை மகிந்தவின் ஒருங்கிணைப்பாளர் பாசில் ராஜபக்ஷ சந்தித்துப் பேசுகையில் இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்கேற்காத ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து பங்கேற்கும் தேசிய அரசாங்கத்தை அமைக்கும் யோசனையையும் முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கவுள்ளது.

இருப்பினும் ஜே.வி.பி.,ஜாதிக ஹெல உறுமய கூட்டு இல்லாத ஒரு தேசியஅரசாங்கம்அமைப்பதை மகிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து வருவதையடுத்து இம்முறுகல் அதிகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யுத்தத்தை...

எதிரான தமிழ்க் கட்சிகள் என்பவற்றுடன் நான்கு தமிழர்களை உள்ள டக்கிய 15 பேர்கள் துறைசார் நிபுணர்கள் குழு என்பவற்றை உள்ளடக்குகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்த மக்கள் ஆணை ஒரு ஒற்றையாட்சிக்கானது. இதிலிருந்து விட்டுக் கொடுப்புக்களைச் செய்வதற்கு பௌத்த மத கடும் போக்காளர்களும் மார்சிய வாதிகளும் அனுமதிக்கப் போவதில்லை.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ கலந்து கொள்ளவில்லை. ஆயினும் அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்போம் என ஹேோகன்ன கூறியுள்ளார். (ச-5,6)

## இரு தமிழ் இளைஞர்கள்...

தாக்குதல் மற்றும் துப்பாக் கிச் சூடு நடத்தப்பட்டது. இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந் நிலையில் நானாட்டான் பிரதேச கட்டடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் நெல்வயலில் இளைஞன் ஒருவரது சடலமும் மீட்கப்பட்டதாகவும் அந்தச் சடலத்திற்கு அருகே ரி-56 ரகத்துப்பாக்கி ,மைக்ரோ பிஸ்ரல் மற்றும் கைக்குண்டு இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன் ரவி என்று அவரது அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் நானாட்டானில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ரசூல் புதுவெளி பகுதியில் பிற்பகல் 12.30 மணியளவிலும் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தியதில் தலையில் குண்டு பாய்ந்து ஒரு இளைஞர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அவ்விளைஞனிடம் இருந்து குண்டு மற்றும் மைக்ரோ பிஸ்டலை கைப்பற்றியதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ச-5)

## அனைத்துக் கட்சிக்...

விரும்பவில்லை. சமாதான முயற்சிகளுக்கு நாம் எப்போதுமே ஆதரவளிப்பவர்கள்.

அரசு முதலில் இனப்பிரச்சினை தீர்வு முயற்சி தொடர்பில் தனது நிலைப்பாடு என்ன என்பது முதலில் முடிவு செய்துவிட்டு எம்மிடம் வரட்டும். அதன் பின்னர் நாம் எமது நிலைப்பாடு என்ன என்பதை அவர்களுக்குத் தெரிவிப்போம் எனவும் அவர் கூறினார்.

ஐக்கியதேசியக்கட்சியின் ஆதரவை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தேடும் அரசு மறுபுறத்தில் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டிய ரவி கருணாநாயக்க இதுவரையில் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட ஆறு அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் தமது கட்சி பங்கேற்றது போன்று இனிமேல் எதிலும் கலந்து கொள்ளப்போவதில்லை என முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை ஐக்கியதேசியக்கட்சியில் இருந்து அரசாங்கத்திற்கு தாவியுள்ள நாலு பேருக்கு எதிராக கட்சி எடுக்கவிருக்கும் தீவிரமான ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாகவும் இன்று நடைபெறும் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க கூறினார். (ச-5)


## தொழிற்பயிற்சி நெறிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக் கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்..

**RADIO, TV AND VIDEO DECK REPAIRING**

சகல இன றேடியோ, ரி.வீ., டெக் மற்றும் எலற்றொனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 12 மாதங்கள்)

**MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**

சகல இன (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

**AIRCONDITIONING AND REFRIGERATION**

சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம்07 மாதங்கள்)

**MOTOR CYCLE MECHANISAM**

சகல இன மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 05 மாதங்கள்)

**MOBILE PHONE REPAIRING** (காலம் 01 மாதம்)

மேலதிக விபரங்களுக்கு:- ஆரம்பம்:-14.07.2006(கிழமை நாள் வகுப்புக்கள்) 15.07.2006 (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Regd. No: 15251 T.P: 021-222 3335


# சைக்கிள் பார்க்கை மூடிவிட உத்தரவு

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தைப் பாதுகாப்புக் காரணம் கருதி மூடிவிடுமாறு யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

அச் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தினுள் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலையடுத்தே நீதிபதி இவ்வுத்தரவைப் பிறப்பித்தார்.

அங்கு இதுவரை நான்கு முறை துப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் மூவர் கொல்லப்பட்டும் ஒருவர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இன்சாட் செயற்கை கோள் நடுவானில் வெடித்துச் சிதறியது

இந்தியாவின் இன்சாட் 4சி செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தும் முயற்சிதோல்வியடைந்தது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ரொக்கட் மூலம் முதன் முறையாக விண்ணுக்கு ஏவப்படும் இன்சாட் வகை செயற்கைக் கோளான இன்சாட் 4சி நேற்று மாலை 5.37 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

செலுத்தப்பட்ட சில விநாடிகளிலேயே ரொக்கட் அதன் பாதையிலிருந்து விலகியது. அப்பகுதிகளில் இருந்தமக்கள் வெளியேற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சிறிஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்ட இன்சாட் 4சி மொத்தம் 2ஆயிரத்து 168 கிலோ எடை கொண்டது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ)தயாரித்துள்ள ஜி.எஸ்.எல்.டி. ரொக்கட் மூலம் முதன்முறையாக இந்த செயற்கைக் கோள் ஏவப்பட்டது.

செலுத்தப்பட்ட சில நிமிடங்களில் பாதையை விட்டு விலகி வெடித்தது. வெடித்த பாகங்கள் சிதறி வங்கக் கடலில் வீழ்ந்தன. இன்சாட் 4சி செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தும் முயற்சி தோல்வியடைந்ததை எதிர்பாராத சதீஷ்தவான் விஞ்ஞானிகள் பெரும் அதிர்ச்சியடைந்தனர். (ச-5)

## மிலிந்த...

அமைச்சுப் பொறுப்பும் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ பி.திஸ் ஸ நாயக்கவுக்கு நெடுஞ்சாலைத்துறை பிரதியமைச்சர் பொறுப்பும் வழங்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை மாற்றம் குறித்து கண்டியில் கடந்த சனிக்கிழமை மகிந்த ராஜபக்ஷ மூத்த அமைச்சர்கள் சிலருடன் ஆலோசனை நடத்தியுள்ளார். இதில் பங்கேற்பதற்காக சில அமைச்சர்கள் கண்டிக்கு உலங்கு வானூர்தியில் சென்றுள்ளனர்.

இச் சந்திப்பில் அமைச்சர்கள் மைத்திரி பால சிறிசேன, ஜெயராஜ் பெர்ணான்டோப் புள்ளே,மங்கள சமரவீர, சுசில் பிறேமஜயந்த உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-5)






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.